# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்



நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை மன்னார்.
*டிஜிட்டல் பிரிண்டிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.



◆பாதை 01 ◆பயணம் 90 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 8 வியாழன் , 22/05/2014


PUBLIC LI

# சர்வதேச விசாரணைக்கு அனுமதியில்லை இலங்கைககு வருமாறு மூனுக்கு அழைப்பு



**(சங்காய்)**
இலங்கையின் தற்போதைய நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக மீண்டும் ஒரு முறை இலங்கை வருமாறு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ முனுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு முறை அழைப்பு விடுத்துள்ளார்.

சீனாவின் சங்காய் நகரில் நடைபெறும் ஆசிய நாடுகளிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள நிலையி லேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பை மேற்கொண்டார்.
போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கையில் இடம் பெற்றுள்ள அபிவிருத்திகள் **(11ம்பக்கம்பார்க்க)**




## தடை தாண்டி சுடர் ஏற்றிய யாழ்.பல்கலைக்கழகம்



**(யாழ்ப்பாணம்)**
கடும் இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாச . பதி கலையரங்கில் நேற்று புதன்கிழமை 21 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அனுஷ்டிப்பு நிகழ்வில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத் துப் பீட மாணவர் களும் விரிவுரையாளர் களும் கலந்துகொண்டனர். கலந்து கொண்ட அனைவரும் கைகளில் தீபங் களை ஏந்தி முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்.

பல்கலைக்கழக வளா கத்திற்கு வெளியில் இராணுவத்தினரும் புலனாய்வாளர்களும் அதிக ளவில் இருந்த நிலையில் இந்த அனுஷ்டிப்பு நிகழ்வு இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ் வினை அனுஷ்டிக்கவிடாமல் கடந்த 16 ஆம் திகதி முதல் நேற்று 20 ஆம் திகதி வரை திடீர் விடுமுறை வழங்கப்பட்டிருந்த நிலையில் **(11ம்பக்கம்பார்க்க)**

## 18500 இற்கு மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர் ஜனாதிபதி ஆணைக்குழு

**(கொழும்பு)** இலங்கையில் யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் 18,500 இற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என ஜனாதிபதி ஆணைக்குழுவைச் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
காணாமல்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, நேற்று அதன் அதிகாரபூர்வ இணையதளத்தை ஆரம்பித்துள்ளது.
இதன்போதே 13.590 பொதுமக்கள் மற்றும் 5000 பாதுகாப்பு படையினர் காணாமல்போயுள்ளதாக அவ்வாணைக்குழு தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம **(11ம்பக்கம்பார்க்க)**

## உசாளினி வீட்டில் புலனாய்வாளர்கள் விசாரணை!

**(முல்லைத்தீவு)**
முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி, யோகபுரத்திலுள்ள உசாளினியின் வீட்டுக்கு புலனாய்வு பிரிவினர் என்று தங்களை அடையாளப் படுத்திய சிலர் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சென்றுள்ளனர்.
இசைப் பிரியாவுடன் இருந்த மற்றுமொரு பெண் தொடர்பில் ஊடகங்களின் வெளியான புகைப் படத்தை காண்பித்து வீட்டிலிருந் தவர்களிடம் விசாரணை நடத்தியதாக தகவ **(11ம்பக்கம்பார்க்க)**

## ஐ.தே.கவின் நம்பிக்கையில்லா தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது




**(கொழும்பு)** ஐக்கிய தேசியக் கட்சியின், நம்பிக்கை யில்லா தீர்மானம் தோற்கடிக் கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினால் அரசாங்கத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக 57 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், 151 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகம் **(11ம்பக்கம்பார்க்க)**

## ஈரானுடன் உறவுகளை வலுப்படுத்த இலங்கை ஆர்வம்

**(ஷங்காய்)** இலங்கை அரசாங்கம் ஈரானுடன் தொடர்ந்தும் உறவுகளை வலுப்படுத்த ஆர்வமாக உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஈரானிய ஜனாதிபதி ருஹானிக்கும் நேற்று மாலை ஷங்காயில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
இதன்போதே ஜனாதிபதி மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் இணைந்து, ஆதரவுடன் செயற்பட ஆர்வமாக உள்ளதாகவும், குறிப்பாக, வர்த்தக உறவை வலுப்படுத்த ஆதரவாக உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஈரான் ஜனாதிபதி **(11ம்பக்கம்பார்க்க)**

## மோடி பதவியேற்பு விழாவில் ராஜபக்ஷவை அனுமதிக்கக் கூடாது- வைகோ



**(டெல்லி)** நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவில் மஹிந்த ராஜபக்ஷ பங்கு பெறுவதை அனுமதிக்கக்கூடாது என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்று, நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பு ஏற்க இருக்கின்ற விழா, இந்திய அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக, டெல்லியில் நடைபெற இருக்கிறது.
தாய்த் தமிழகத்தின் வாழ்வாதாரங்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் மன்னிக்க முடியாத துரோகம் செய்த காங்கிரஸ் கட்சி மீள முடியாத படுதோல்வியைச் சந்தித்தது. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை மக்கள் முற்றாக உதறி எறிந்து உள்ளனர்.
இலங்கையின் அரசு லட்சக்கணக்கான ஈழத்தமிழர்களைக் **(11ம்பக்கம்பார்க்க)**


24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்.
www.putheyavan.com
http://www.
அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்
உள்ளதை உள்ளபடி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் - பௌத்த கலவரத்தை ஏற்படுத்த சதி
## மாகாணசபை உறுப்பினர் றிப்ஹான் பதியுதீன் கண்டணம்

முஸ்லிம்களின் ஹலால் உணவில் ஆரம்பித்து தற்பொழுது பொருளாதாரத்தை அழிப்பதில் இனவாத அமைப்புக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறான கலவரமொன்றை ஏற்படுத்தி அதில் குளிர்காய நினைப்பதே அவ்வமைப்புக்களின் நோக்கமாகும் என்று வட மாகாண சபை உறுப்பினர் றிப்ஹான் பதியுத்தீன் தெரிவித்துள்ளார்.

முஸலிம் சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு அச்சமூகத்தின் பொறுமையைச் சோதிக்க இந்த இனவாத கும்பல்கள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட டுள்ளதாவது,

அளுத்கமையில் முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான வர்த்தக நிலையமொன்று எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சர்ச்சை தனிவதற்குள் மாவனல்லையில் மற்றுமொரு முஸ்லிம் வர்த்தகரின் • ஹாட்வெயார் கடையொன்றை எரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இனங்களுடன் சகோதரத்துவமாக வாழ நினைக்கும் முஸ்லிம் சமூகத்தின் மீது பொது பல சேனா அமைப்பு, ஏன் இவ்வாறான காழ்ப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது?

இந்த இயக்கம் கடந்த 3 வருட காலமாக இயங்கி இந்த நாட்டில் உள்ள பௌத்த மக்கள் குறிப்பாக பௌத்த இளைஞர்கள் மத்தியில் முஸ்லிம்கள் பற்றி தப்பபிப்ராயங்களை ஏற்படுத்தி அவர்களை தூண்டி விடுகின்றன.

முஸ்லிம்களின் ஹலால் உணவில் ஆரம்பித்து தற்பொழுது பொருளாதாரத்தை அழிப்பதில் இந்த சேனாக்கள் உக்தியைப் பாவிக்கின்றார்கள்.

முஸ்லிம் - பௌத்த இனக் கலவரத்தை உண்டுபண்ணுவதற்கும் அதில் அவர்கள் குளிர்காய நினைப்பதுமே இவர்களது நோக்கமாகும்.

முஸ்லிம் சமுகத்தின் மீது தொடர்ச்சியாக வன்முறைகளையும் காழ்ப்புணர்வுக் கருத்துக்களையும் விதைத்து வரும் இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் எல்லையை மீறி வருகின்றது.

முஸ்லிம் சமூகத்தினை குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ள இந்த இயக்கத்தின் செயற்பாடுகளை அரச மேல்மட்டம் கட்டுப்படுத்த வேண்டும்
.
இந்த அடாவாடித்தனங்களை கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படுமென அரசு உறுதியளித்துள்ள நிலையில் அது உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும்.

ஏனெனில் நாங்கள் அரசுடன் இணைந்து தாய்நாட்டுப் பற்றுடன் செயற்படும்போது இவ்வாறான செயல்கள் மூலம் எமது சமூகம் எங்களைப் பார்த்து கேள்விகளைக் கேட்கும்போது பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

வடக்கில் புலிகள் அமைப்பினால் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட செயற்பாடுகளை விஞ்ஜிய நிலையில் இன்று பொது பல சேனாவின் நட்வடிக்கைகள் அமைந்துள்ளன.


சட்டத்தையும் ஒழுங்கையும் இவர்கள் கையில் எடுத்துகொண்டு காட்டுத்தார் பாருடன் இந்த இயக்கம் செயற்பட்டு வருகின்றது.

கௌரவமான காவியுடை தரித்துக்கொண்டு இனவாதத்தை கக்கி வரும் இவர்களின் நடவடிக்கைகளுக்கு ஒரு தீர்க்கமானதொரு முடிவு வேண்டும்.

தமிழர்களில் ஒரு சிலரோ அல்லது முஸ்லிம்களின் ஒரு சிலரோ இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டால் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படுவர்.

இக்காலகட்டத்தில் பெரும்பான்மை இனத்தின் ஒரு பிரிவினர் இந்த அடாவடித்தனங்களில் ஈடுபடும்போது மட்டும் அரசோ அல்லது இந்த நாட்டில் உள்ள மகா சங்கத்தினர்கள் மௌனம் ஏன்? இதன் பின்னனி என்ன? என்று அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப பட்டுள்ளது.

# வேப்பங்குளத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தில் ஊழல்கள்



நான் வேப்பங்குளம் கிராமத்தில் வசிக்கும் இந்திய வீட்டுத்திட்டப்பயனாளி. எனது பெயரைக்குறிப்பிட்டால் எனக்கு வீட்டுத்திட்டம் கிடைக்காது என்ற பயத்தினால் பெயர்குறிப்பிடாமைக்கு என்னை மன்னிக்கவும்.

பின்வரும் பிரச்சனைகள் எமது ஊரில் காணப்படுகிறது.என பயனாளி ஒருவரால் இந்திய வீட்டுத்திட்ட யாழ் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அதன் விபரம் வருமாறு.

1)இங்கு இந்திய வீட்டுத்திட்டத்தை முதலில் பெறுவதற்கு தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்கு 10000/: ரூபா தொடக்கம் 20000/: ரூபாவை முற்பணமாக வழங்க வேண்டும் இதனால் முற்பணம் வழங்க முடியாத ஏழைக்குடும்பங்கள் தொடர்ந்தும் குடிசைகளில் வசிக்கின்றனர்.

2)தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்கு· சாராயம், கோழிப்புரியாணி, காசுகொடுப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்டத்தை வழங்குகின்றனர்.

3)எந்த ஒரு பெயர் பட்டியலும் இது வரையும் பொது இடங்களில் ஒட்டப்படவில்லை ஆனால் இரவுநேரங்களில் இரகசியமாக பெயர்களை வழங்குகின்றனர்.

4)இந்திய வீட்டுத்திட்ட கொள்கையும் முறையாக பின்பற்ற படவில்லை.

5) தொழினுட்ப உத்தியோகத்தர்கள் முன்கூட்டியே பயணாளிகளிடம் பணத்தை பெற்றுள்ளமையினால் அதிகாரத்தை பயன்படுத்தி தற்பொழுது கட்டப்படும் வீடுகளை பூணரப்படுத்த முடியாதுள்ளனர்.

6)தொழினுட்ப உத்தியோகத்தர் பணத்தை மீளப்பெறும் பத்திரத்தில் கையெப்பம் இடுவதற்கு 1000/: தொடக்கம் 2000/:ரூபா வரை பணம் பெற்றே கையெப்பம் இடுகின்றனர்.

7)இதுவரை வழங்கப்பட்ட எந்த ஒரு வீடும் 100% இந்திய வீட்டுத்திட்ட கொள்கைக்கமைவாக பூரணப்படுத்தபடவில்லை ஆனால் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு சகல கொடுப்பனவுகளையும் வழங்கியுள்ளனர்.இதனை உறுதிப்படுத்த வங்கி புத்தகத்தை தனித்தனியாக பரிசீலனை செய்து பார்க்கலாம்.

8இந்திய வீட்டுத்திட்ட பெயர் பட்டியலில் வராத சிலரையும் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் பணத்தினை பெற்றுக்கொண்டு உட்புகுத்த முயற்சிகள் எடுக்கின்றனர்.

9)அரச காணிகளிலும் வீட்டுத்திட்டம் வழங்கியுள்ளனர்.

10)மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள், வேப்பங்குள கிராம பிரச்சனைகள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரையும் எந்த நடவெடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

11) தனியார் காணிஉறுதி வழங்கப்பட்டும் கோவை பூர்த்தி ஆக்கப்பட்ட பயனாளிகளின் கோவை இதுவரையும் ஒரு வருடத்திற்கு மேலாகியும் இந்திய உயர்ஸ்தானியர் அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் 03 மாதத்திற்கு முன் கோவை பூர்த்தி ஆகாதவர்களுக்கும் பணத்தை பெற்றுக்கொண்டு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

12) உத்தியோகர்களின் தாமதமான செயற்ப்பாட்டால் பயனாளிகளின் கட்டுமானப்பணிகள் தாமதமடைகின்றது.

13)மொத்தவியாபாரிகளிடம் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் பணத்தினை பெற்றுக் கொண்டு இவர்கள் சிபாரிசு செய்பவர்களிடம் மட்டுமே கல், மண், சீமெந்து போன்றவற்றை அதிக விலையில் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு சம்மந்த பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுத்து அனைவருக்கும் இவ்வீட்டுத்திட்டத்தை பெற்றுத்தர ஆவணம் செய்யுமாறு தங்களை தாழ்மையாக வேண்டி நிற்கின்றேன். எனக் குறிப்பிட்டுள்ளதுடன் பலருக்கு பிரதிகளும் அனுப்பப்பட்டுள்ளது.

# அருட்சகோதரர் டிலாசால்-தினம்

ஆசிரியர்களின் பாதுகாவலரான புனித டிலாசால் சகோதரரின் வருடாந்த நினைவு தினம் வருடா வருடம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினம் 21.05.2014 இல் மன்.புனித ஆனாள் ம.ம.வித்தியாலத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இத்தினத்தையொட்டி மாணவர் களுக்கான பொது அறிவுப்போட்டி, கட்டுரை, கவிதை போட்டிகள் நடாத்தப்பட்டன

ஆசிரியர்களுக்கான கருத்தமவர்கள் அருட்.சகோ.ஸ்ரனிஸ்லஸ் அவர்களால் நடாத்தப்பட்டது.

புதன் காலை 10.00 மணியளவில் திருப்பலி பூசையுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்நிகழ்விற்கு டிலாசால் அருட்ச கோதரர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை (எஸ்.டி.எஸ்) உறுப்பினர்கள் பழையமாணவர்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் டிலாசால் அருட்ச கோதரர்கள் முகாமைத்துவம் செய்யும் நிர்வகிக்கும் வித்தியாலங்கள் மன்.புனித ஆனாள் ம.ம.வி, மன்.நானாட்டான் ம.வி, மன்.கருங்க ண்டல் றோ.க.த.க.வித்தியாலயம், மன் பேசாலை ம.வி, மன்.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஆகியனவாகும் .

இவர்களின் கல்வி பணிவாழ்வின் மூலம் இவ்வித்தியாலங்கள் கல்வியிலும், ஒழுக்கத திலும் சிறந்து வழங்குகிறது இத்தினத்தில் மன்.புனித ஆனாள் ம.ம.வி முதல்வர் அருட் சகோ சந்தியோகு அவர்களை பாடசாலை சமூகம் வாழ்த்தி நிற்கிறது அவரின் பணிவாழ்வின் மூலம் வித்தியாலயம் உயர்வடைய நாமும் பிராத்திப்போம்.

## (ஏ)தர சித்தி 2013



2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடை பெற்ற க.பொ.த. (சா.தர) பரீட்சையில் மன்.புனித ஆனாள் ம.ம.வித்தியாலய மாணவர்கள் 46,பேர் பரீட்சைக்கு தோற்றினர்.

இதில் 46, மாணவர்களும் கிறீஸ்தவம் (றோ.க) பாடத்தில் (ஏ)தர சித்தி பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.மூத்த குமாரத்தியாகிய வங்காலையின் விசுவாசத்தின் ஆழமான பெருமையை இம்மாணவர்கள் பெருமைப்படு த்தியுள்ளனர். இவர்களை நன்றாக பயிற்று வித்த ஆசிரியர்களையும், அதிபரையும் வங்காலை சமூகம் பாராட்டி நிற்கிறது.

# மாணிக்கக் கல் அகழ்ந்த மூவர் கைது




கிரிதிவெல - ரங்வல பிரதேசத்தில் களனி கங்கையில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் வசமிருந்து மாணிக்கக்கல் அகழப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மீதிரிகல பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.
மேலும் இவர்கள் எதிர்வரும் 26ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கிரிதிவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# புதையல் தேட முற்பட்ட நால்வர் கைது



குச்சவெளி பகுதியில் புதையல் தேட முற்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் குச்சவெளி - இரனக்கேனி செம்புமலை வனப்பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்து இவர்கள் புதையல் தோண்ட முற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வசமிருந்து பூஜைப் பொருட்கள் மற்றும் புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் எரக்கன்டி, வாழைச்சேனை, வவுனியா மற்றும் உப்புவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு, குச்சவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.



புதியவன்
PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

## தமிழர் கலாசாரம் காக்கப்படுமா?

உலகிலே மூத்த குடியாகவும் மெழியிலே முதன்மையாகவும் வகிபாகத்தைக் கொண்ட தமிழ்க் கலாசாரம் மிக உயர்ந்த இடத்தில் தனை நிலை நிறுத்தி அத்தனை சமுதாய குழுமத்திற்க்கும் வழிகாட்டிய எமது பண்பாட்டியல் ஒழுக்க நெறிமுறைக் கோட்பாடு உயர்ந்த நிலையில் உறுதி கெண்டிருந்தது.

அந்நிலை பழந்தமிழ் இலக்கிய மரவுகளுக்கு கூடாகவும் அதையொட்டி சீர்திருத்த வாழ்வியல் கோட்பாடுகளும் இனத்துவ மெழித்துவ அடையாளத்தை நிலைநிறுத்தியிருந்தன ஆனால் இவை விஞ்ஞான யுக நிலைகளுக்கு முன் ஒழுக்க நெறி என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட கோட்பாட்டை வரன் நெறி முறையாக பேணப்பட்டது. ஆனால் இவை காலத்தால் மற்றம் பெறும் ஒரு கடுகதி நிலையை சமுதாய நிலைதளம் கடைப்பிடிக்க வேண்டிய நிலைதளம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தை நடைமுறையபக்கியுள்ளது.

இவை ஒரு ஆரோக்கிய வாழ்வியல் இருப்பை தனிமனித நிரலில் இருந்து நிறைவுறும் சமுதாய அடைவுமட்டம் வரை ப்ண்பாட்டியல் தன்னியல் நிலையை வேரறுத்து விடுகின்ற போக்கே வாடிக்கையாகி விட்டது எனவே இன்றைய நடைமுறை செயல் மாத்தியேசி எனும் தத்துவக் கோட்பாடு விதிகளையும் மரவுகளையும் கடந்து நவ நாகரிக போக்கில் கலாசாரம் என்பது மாறுபடடு சென்றால் தான் சுய மரியாதை மேலோங்கும் என இன்றைய இணைய மற்றும் வாழ்வியலாளர்கள் விதிக்காத விதியை விதித்து வைத்திருக்கிறார்கள்.

ஏனெனில் காட்சி ஊடகங்களின் வருகை நவீன கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை இணையத்தின் பயன்பாடு போதைவஸ்து பாவனை இவை சுயசுகத்தை ஊட்டுவதால் எப்படி யதார்த்த பண்பாட்டியல் மேலோங்க முடியும் மாறாக கலியுக நவநாகிரீகம் எம்முடைய இருப்பை இல்லா தொழிக்கும் நடை உடை பாவனை மூத்தேர் இளையோருக்கிடையேயான மதிப்பளிப்பு மாறுபட்ட திருமண சம்பிரதாயம் இதனால் எவ்வாறு அடிப்படையை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஏது நிலையை உருக்க முடியும்.

இன்றைய இளையோர்களை தமது குடும்பத்தினராலேயே வரையறுக்க முடியாத கட்டுப்பாடற்ற நீள் தொடர்ச்சியே எல்லா வகைப்படுத்தப்பட்டோரும் பின் பற்றப்படுகின்ற பிற்போக்கான விடையங்களை உதாரண மாக்குகின்ற வளர்ச்சிப் படிமுறையே மேன் நாட்டு சிந்தனைத்துவ ஏகாதிபத்தியம் ஒழுக்க நெறிக்கட்டமைப்பை சீரளிப்பதே முதலா ழித்துவக் கொள்கையாக வகுத்து வைத்து ள்ளனர்.

இந்த மாயை ஒரு காலத்தில் உணவருந்தும் போது தண்ணீர் பருகுதல் கூடாது என்று தடுப்பதுண்டு ஆனால் இன்று சோடா இல்லாமல் உணவருந்த முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த மாற்றங்கள் ஏற்றங்கள் என இளைய தலைமுறை நோக்குகின்றது ஆனால் ஒரு இனம் தனது மொழி பண்பாடு மரபு வளி நடைமுறை இம்மூன்றையும் இழக்குமாயின் இவ் இனமே அழிந்ததற்கு ஒப்பாகிவிடும் எனக்கணி க்கப்பட்டுள்ளது. இந்த ஆபத்தில் இருந்து மீள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

# போராட்டக்காரனுக்கு ஓய்வும் இல்லை... தோல்வியும் இல்லை

## மீண்டு எழுந்த வைகோ




(சென்னை)
முள்ளிவாய்க்கால் படுகொலையில் உயிர் ஈந்தவர்களுக்கு நினைவு அஞ்சலி பொதுக்கூட்டமாக தண்டையார்பேட்டையில் கடந்த 17-ம் தேதி நடந்தது அந்த நிகழ்வு. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு வைகோ கலந்துகொள்ளும் முதல் கூட்டம் என்பதால் ஏகத்துக்கும் எதிர்பார்ப்பு இருந்தது.

யார் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று மேடையில் அமர்ந்தபடியே தொகுப்பாளருக்கு அறிவுறுத்தல் கொடுத்துக்கொண்டே இருந்தார் வைகோ. வைகோ முகத்தில் இருக்கும் வழக்கமான உற் சாகம் மிகவும் குறைந்திருந்தது.

மே 17 இயக்கம் திருமுருகன் காந்தி, "இனப் படுகொலை இந்த சமூகத்துக்கு ஏன் நடந்தது என்ற சிந்தனையில் இருந்துதான் நமது அடுத்தகட்ட அரசியலும் வாழ்வும் இருக்கிறது. நாம் இங்கு பின்னுக்குத் தள்ளப்படுகிறோம் என்றால், இதற்குப் பின்னால் மாபெரும் அரசியல் ஒழிந்துகொண்டு இருக்கிறது. தோல்வி எப்போதும் தோல்வி அல்ல... நிச்சயம் வெற்றி தேடி வரும்!" என்று பொதுவாகப் பேசினார்.

அடுத்து பேசிய ஓவியர் வீரசந்தானம், "தி.மு.க, காங்கிரஸ் சேர்ந்துதான் இனத்தை அழித் தது. அதற்காகத்தான் இப்போது அந்தக் கட்சிகள் கருவறுக்கப்பட்டுள்ளன. மக்கள் பழிதீர்த்துவிட்டனர். ஆனால், ஒன்றே ஒன்று ஏதோ நெருடுகிறது. மக்கள் தலைவராவது வெற்றிபெற்று இருக்கலாம். இதற்கு காலம் பதில் சொல்லும்" என்று சொல்லி அமர்ந்தார். இறுதியாகப் பேசிய வைகோ, "அந்தச் சின்னஞ்சிறு பாலகன் இந்த மண்ணில் பிறந்ததைத் தவிர வேறு எந்த பாவமும் செய்யவில்லை.

பதுங்கு குழியிலே பிறந்தவன், பதுங்கு குழியிலேயே கொல்லப்படு கிறான். 2009-ம் ஆண்டு மே மாதம் 17, 18 தேதிக ளில் சிங்கள அரசால் இந்திய அரசின் துரோகத்தின் துணையுடன் படுகொலை செய்யப் பட்ட லட்சக்கணக்கான தமிழர்களுக்கு, நம் தொப்புள் கொடி உறவுகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் இதேவேளையில், ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் லட்சக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதைக் கண்டும் காணாமலும் இருந்தது காங்கிரஸ் அரசு. அவர்கள் இன்று குப்பைத்தொட்டியில் தூக்கி வீசப்பட்டுள்ளனர். நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து இவ்வளவு கேவலமான, அவமானகரமான தோல்வியை காங்கிரஸ் சந்தித்ததே இல்லை.


"நீ என்ன ஜெயித்துவிட்டாயா? நீயும் தோற்றவன் தானே?" என்று நீங்கள் கேட்கலாம். நான் போராட்டக் காரன். எனக்குத் தோல்வி என்பதே கிடையாது. என் வாழ்வில் தோல்வி என்று நான் எதையுமே கருதியது இல்லை. எனக்குத் தோல்வி வருகிற போதுதான் முன்பைவிட 100 மடங்கு உற்சாகத்தோடு உழைக் கப் புறப்படுவேன்.

எது நடக்க வேண்டுமோ, அது நடந்துவிட்டது. இனி அடுத்தகட்டத்தை நாங்கள் திட்டமிட்டு நிறைவேற்று வோம். நான் பெரியாரின் சுயமரியாதை உணர்வு கொண்டவன். அண்ணாவின் பட்டறையில் வளர்ந்தவன். நம்முடைய இலக்குகளை அடைய எது சரியான உபாயங்களோ அந்த உபாயங்களைக் கையாள்வோம்.

இந்தியாவில் எந்த இயக்கங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றாலும், இரண்டு ஆண் டுகள் தான் தடைவிதிப்பார்கள். ஆனால், தாங்கள் தோற்றுப்போவோம் என்று தெரிந்து, அவசர அவசரமாக விடுதலைப்புலிகளுக்கு ஐந்து வருடங்கள் காங்கிரஸ் அரசு தடைவிதித்திருக்கிறது.

நாங்களே விடுதலைப்புலிகள்தான். இனி என்ன செய்யப்போகிறீர்கள்? காங்கிரஸ் முடிந்துவிட்டது. நாம் வெற்றி பெற்று விட்டோம். போராட்டக்காரனுக்கு ஓய்வும் இல்லை. தோல்வியும் இல்லை" என்றார். கூட்டத்தில் கைதட்டல் அடங்க வெகுநேரம் ஆனது!

# கே.பிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றில் கோரிக்கை!



(கொழும்பு)
கே.பி என அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான ஆயுதக் கொள்வனவாளரான குமரன் பத்மநாதனை விசாரிக்க வேண்டும் அல்லது சட்ட நடவடிக்கைக்காக இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று இலங்கையின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றில் மீண்டும் கோரியுள்ளது.

ஆயுதப்படைகள் பொலிஸ் உட்பட 78,100 பேர் கொள்ளப்பட்டமைக்கு கே.பி காரணமாகவிருந்தார் எனவும், அவரை அரசாங்க அதிகாரிகளின் பாதுகாப்பில் வைத்திருக்கலாம். உடனடியாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமெனவும் கூறிய ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கோரினார்.

ஐக்கிய தேசிய கட்சி நேற்று சமர்ப்பித்த எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,.

கே.பி ஒகஸ்ட் 2009 ல் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார். மே 2009 ல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தோற்கடிக் கப்படும் முன்னர் இவர் விடுதலைப் புலிகளின் பிரதான ஆயுத கொள்வனவாளராக இருந்தார்.

இன்று அரசாங்கம் மௌனமாக இருக்கிறது. அது கே.பியை பாதுகாத்து வைத்துள்ளது. கே.பிக்கு சொந்தமான 19 கப்பல்களை பறிமுதல் செய்யப்போவதாக அரசாங்கம் கூறியது. இன்று என்ன நடந்துள்ளது என்றும் அவர் கேட்டார்.

ஆளும் கட்சி அரசியல் வாதிகள் ஆதரவுடன் இலங்கையில் செயற்படும் சர்வதேச போதைவஸ்து கடத்தல் கூட்டு நிறுவனங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.க கொண்டுவந்துள்ளது.

போதைப்பொருள் 48 கப்பல் கொள்கலனிலும் 23 விமான வழி சரக்குகளிடையேயும் காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார். போதை வஸ்து கடத்தல் தொடர்புடைய 22 பெண்களும் 23 ஆண்களும் கைது செய்யப்பட்டனர் இவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென அறிய நாம் விரும்புகின்றோம் என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவமாதாவின் வணக்கமாத சிந்தனை



ஆனால் அவற்றை போக்கி, அழிவு பாதையில் சென்ற மனி தனுக்கு மீட்பளித்து, வாழ்வு கொடுக்க இரண்டாம் ஆதாம் கிறிஸ்து கன்னிமரியாளை அன்னை யாகக் கொண்டு கடவுளு டைய விருப்பத்தை நிறை வேற்றி, மனுக்குலத்துக்கு வாழ்வளித்த நிகழ்வு கிறிஸ்தவர்களாகிய எம் மனக்கண்களில் என்றும் நீங்காமல் எம்மை மேலும் சிந்திக்க வைக்கின்றது.

கடவுளின் இறை அழைப்புக்கு தன்னை முற்றுமுழுதாக விட்டுக் கொடுத்த இறை அன்னை இறைமகனை ஈன்றெடுத்தது மட்டுமல்ல அவரோடு கூட பயணித்து அவரது பாடுகள் மரணத்தில் பங்கு பற்றி னாள்.

கடவுள் மனிதத் தன்மையில் பங்கு பெற ஓர் கன்னித்தாயைக் கண்டார். மனிதனும் தெய்வீகத் தன்மையில் பங்கு பெற ஓர் கன்னித்தாயைக் கண்டான்.

கடவுளும், மனிதனும் திராட்சை செடியும் அதன் கொடியும் போல, ஒன்றித்து ஞான விதமாய் பிறப்பதற்கு ஒரு கன்னித்தாயைக் கண்டனர்.

மனுக்குலத்தை ஈடேற்ற, தனது மாபெரும் திட்டத்தை நிறைவேற்ற, கன்னிமரியாளை அன்னையாகக் கொண்ட இறைவன் மனிதனானது ஒரு மாபெரும் மறை நிகழ்ச்சியாக எம் முன் காட்சி தருகின்றது.

ஏவாளை துணவியாகக் கொண்ட ஆதாம் பாவத்தையும், அதன் விளைவான தேவ கோபத்தையும் அவனுக்கு அளித்தான்.

அத்துடன் நிறுத்திவிடவில்லை பாவிகளுக்காகப் பரிந்து பேசி, பலியின் பயனைப்பெற்றுதர அவள் பரலோகம் ஏறினாள்.

பரகதியில் வீற்றிருந்து தனது மகனாரிடம் பக்குவமாக வேண்டி தனது ஞானப்பிள்ளைகளை வழிநடத்தி, அன்பு செய்து வருகிறாள்.

மனுக்குலத்திலே மதிப்பிட முடியாத இந்த அன்புமிக்க சம்பவத்தை மறவாமல் அதனால் பயனடைய நாம் எம்மில் கட்டியெழுப்ப வேண்டியது மனத்தியானம்.

அம்மனத்தியானத்தை எம்மில் வளர்க்க எமக்கு உதவுவது தான் திருச்செபமாலை. திருச்செபமாலை சொல்லுவோம். அன்னையின் கரம்பிடிப்போம்.

## சந்தேக நபரின் பணத்தை கொள்ளையிட்ட பொலிஸார் நீதிமன்றிற்கு செல்லவுள்ள சட்டத்தரணிகள்

(கொழும்பு)
சந்தேக நபர் ஒருவரின் பணத்தை, பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொள்ளையிட்டுள்ளனர். அல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் சந்தேக நபர் ஒருவரை அண்மையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்த 150, 000 ரூபா பணத்தை பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலவந்தமாக அபகரித்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சில வாரங்களுக்கு முன்னதாக பணம் கொள்ளையிடப்பட்டதாகவும், கொள்ளையிடப்பட்ட பணத்தை வழங்குவதாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குறுதி அளித்த போதிலும், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என சந்தேக நபர் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றின் உதவி நாடப்படும்- சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றின் உதவியை நாட உள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் அடக்குமுறைகளை பிரயோகித்து வருகின்றனர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர். நீதிமன்றினை அவமரியாதை செய்யும் வகையில் பொலிஸார் செயற்பட்டு வருகின்றனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது. நீதிமன்றினதும் சட்டத்தினதும் வழிகாட்டல்களை ஏற்றுச் செயற்பட வேண்டிய பொலிஸார், அரசியல்வாதிகளின் வழிகாட்டல்களை பின்பற்றி வருகின்றனர். சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க அரசியல்வாதிகளின் கட்டளைகளை நிறைவேற்றி வருகின்றார்.

அனுர சேனாநாயக்க, ஒய்வு பெறும் வயதெல்லையை கடந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எனவே பதவியில் நீடிப்பதற்காக அரசியல்வாதிகளின் உத்தரவுகளை ஏற்றுக்கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இன்று

**வைகாசி - 07 வியாழக்கிழமை 22.05.2014**

திதி: அட்டமி மு.ப 8.24
நட்சத்திரம்: சதயம்

சுப நேரம்: 7.22 - 8.52 வரை
இராகு காலம்: 1.22 - 2.52 வரை
எமகண்டம்: 5.52 - 7.22 வரை



## இன்றைய பலன்

22.05.2014

**வழங்கியவர் மணிகண்டன்**




உங்கள் ராசிநாதன் செவ்வாய் தன, சப்தம ஸ்தான அதிபதி சுக்கிரன் நற்பலன் வழங்குகின்றனர். மனம், செயலில் உறுதி இருக்கும். உழைப்பினால் அதிக பணம் சம்பாதிக்கிற வாய்ப்புக்களை, தவறாமல் பயன்படுத்துவீர்கள். சுய அந்தஸ்து பாதுகாக்க, பணச்செலவில் தாராள குணம் பின்பற்றுவீர்கள். பொது இடங்களில் உங்கள் சொல்லுக்கு, கூடுதல் மரியாதை கிடைக்கும்.




உங்கள் ராசிக்கு இன்று செவ்வாய், கேது தவிர மற்ற கிரகங்கள் அளப்பரிய வகையில், நற்பலன் வழங்குகின்றனர். பசு, பால் பாக்ய யோகத்தினால், பலவித நன்மையும் வந்து சேரும். மனதில் உற்சாகமும், செயல்களில், புதிய பரிமளிப்பும் உருவாகும். தம்பி, தங்கையின் வீட்டில் மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். வாகன பயணம் அளவுடன் மேற்கொள்வீர்கள்.




இன்று, உங்கள் ராசியில் சுக்கிரன், மூன்றாம் இடமான தைரியம், புகழ் ஸ்தானத்தில் சூரியன் அனுகூல அமர்வில் உள்ளனர். முகத்தில் சந்தோஷத்தின் வெளிப்பாடு பிரகாசமாக இருக்கும். புதிய முயற்சியை, தகுந்த திட்டமிடுதலுடன் துவங்குவீர்கள். எதிர்ப்புகள் விலகி, வாழ்வில் ஒளிமயமான பாதையைத் தரும். வீட்டிற்கு வரும் உறவினர்களை பரிவுடன் உபசரிப்பதால் அன்பு வளரும்.




உங்கள் ராசிக்கு இன்று செவ்வாய், கேது தவிர மற்ற கிரகங்கள் அளப்பரிய வகையில், நற்பலன் வழங்குகின்றனர். பசு, பால் பாக்ய யோகத்தினால், பலவித நன்மையும் வந்து சேரும். மனதில் உற்சாகமும், செயல்களில், புதிய பரிமளிப்பும் உருவாகும். தம்பி, தங்கையின் வீட்டில் மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். வாகன பயணம் அளவுடன் மேற்கொள்வீர்கள்.




உங்கள் ராசிக்கு, இன்று அனுகூல பலன் தரும் கிரகங்களாக சுக்கிரன், கேது, செவ்வாய் செயல்படுகின்றனர். உங்கள் நலம் விரும்புபவரின் வாழ்த்து, உதவி கிடைத்து மனம் மகிழ்வீர்கள். குடும்பத்தேவை நிறைவேற்ற தாராள பணவசதி துணை நிற்கும். இளைய சகோதரரின் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து, குடும்ப ஒற்றுமையை பாதுகாப்பீர்கள்.




உங்கள் ராசிக்கு இன்று செவ்வாய், கேது தவிர மற்ற கிரகங்கள் அளப்பரிய வகையில், நற்பலன் வழங்குகின்றனர். பசு, பால் பாக்ய யோகத்தினால், பலவித நன்மையும் வந்து சேரும். மனதில் உற்சாகமும், செயல்களில், புதிய பரிமளிப்பும் உருவாகும். தம்பி, தங்கையின் வீட்டில் மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். வாகன பயணம் அளவுடன் மேற்கொள்வீர்கள்.




உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் புதன், ஒன்பதாம் இடத்தில், குரு பகவான் அனுகூல அமர்வில் உள்ளனர். குடும்பத்தினரிடம் உருவான மகிழ்ச்சி மென்மேலும் வளர அனுகூலம் ஏற்படும். பணவரவு அதிகம் பெற உதவுகின்ற புதிய வழிமுறை ஆராய்வீர்கள். இளைய சகோதரர் சொல்லும் வார்த்தையை வேதம் என கருதுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.




உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் புதன், ஒன்பதாம் இடத்தில், குரு பகவான் அனுகூல அமர்வில் உள்ளனர். குடும்பத்தினரிடம் உருவான மகிழ்ச்சி மென்மேலும் வளர அனுகூலம் ஏற்படும். பணவரவு அதிகம் பெற உதவுகின்ற புதிய வழிமுறை ஆராய்வீர்கள். இளைய சகோதரர் சொல்லும் வார்த்தையை வேதம் என கருதுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.




உங்கள் ராசிக்கு, இன்று அனுகூல பலன் தரும் கிரகங்களாக சுக்கிரன், கேது, செவ்வாய் செயல்படுகின்றனர். உங்கள் நலம் விரும்புபவரின் வாழ்த்து, உதவி கிடைத்து மனம் மகிழ்வீர்கள். குடும்பத்தேவை நிறைவேற்ற தாராள பணவசதி துணை நிற்கும். இளைய சகோதரரின் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து, குடும்ப ஒற்றுமையை பாதுகாப்பீர்கள்.




உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் உச்சம் பெற்ற சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே, நற்பலன் தருகின்றனர். மனமகிழ்ச்சியுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். உங்களின் இனிய அணுகுமுறை பார்த்து, பொறாமை குணம் உள்ளவர் இடையூறு செய்வர். குடும்ப உறுப்பினர்களிடம் உள்ள ஒற்றுமை, குறைவுபடாத வகையில், பொறுமை குணம் பின்பற்ற வேண்டும்




உங்கள் ராசிக்கு இன்று கேது, சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். செயல்களில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவதால் மட்டுமே, ஓரளவு நன்மை கிடைக்கும். பொது விவாதங்களில் கருத்து சொல்ல வேண்டாம். இளைய சகோதரர் வகையில், எதிர்பார்ப்புகளை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தரவேண்டாம்.





இன்று, உங்கள் ராசிக்கு நவக்கிரகங்களில் செவ்வாய், கேது தவிர, மற்ற கிரகங்கள், வியத்தகு அளவில் நற்பலன் தருகின்றனர். பல நாள் மனதில் உதித்த திட்டம், செயல் வடிவம் பெறும். புதியவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். உடன் பிறந்தவர்களுக்கு, மங்கல நிகழ்ச்சி நடத்த, சாதகமான சூழல் உருவாகும். சிலர் வீடு, வாகனம் புதிதாக வாங்க நல்யோகம் உண்டு.

## சிந்திக்க சில வரிகள்

**மற்றவனுடன் உன்னை ஒப்பிட்டு பார்க்காதே**
**அவன் வேறு நோக்கத்திற்காக பிறந்திருக்கிறான்**
**நீ வேறு நோக்கத்திற்காக பிற்ந்திருக்கிறாய்**
**இரண்டு மனிதர்களை ஒரு நோக்கத்திற்காக படைக்க**
**கடவுள் முட்டாள் இல்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய தளங்கள் முடக்கப்பட்டமைக்கு எதிராக மனித உரிமைப் ஆணைக்குழுவில் முறைப்பாடு




இணைய தளங்கள் முடக்கப்பட்டமைக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சில இணைய தளங்கள் சட்டவிரோதமான முறையில் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்சார் இணைய ஊடகவியலாளர்கள் பேரவையினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் சில இணைய செய்தி இணைய தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்ட சில இணைய தளங்கள் கூட உத்தியோகப் பற்றற்ற ரீதியில் முடக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் எட்டு இணைய தளங்கள் இலங்கையில் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித் துள்ளார். அரசாங்கத்திற்கு எதிராக தகவல்களை வெளியிடும் இணைய தளங்களே இவ்வாறு முடக்க ப்பட்டுள்ளன.

# யாழ். பல்கலை மாணவர்கள் விரிவுரை பகிஸ்கரிப்பு




யாழ். பல்கலைகழக விரிவுரைகளை நாளை முதல் இரண்டு நாட்களுக்கு பகிஸ்கரிக்க உள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

யாழ். பல்கலைகழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் நேற்றைய தினம் பல்கலைகழக வளாகத்தினுள் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாகவே நாளை முதல் இரு தினங்களுக்கு மாணவர்கள் பகிஸ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளனர்.
முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஸ்டிப்பதை தடுக்கும் முகமாக கடந்த ஒரு வ்ாரகாலமாக பல்கலைகழகம் மூடப்பட்டிருந்து இன்றைய தினமே மீண்டும் திறக்கப்பட்டது.

பல்கலைகழகம் மூடப்பட்டிருந்த காலப்பகுதியான நேற்றைய தினம் காலை எவ்வாறு பல்கலைகழக வளாகத்தினுள் எச்சரிக்கை துண்டு பிரசுரம் ஒட்டப்பட்டது என மாணவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# யாழ். பல்கலைக்குள் மீண்டும் அச்சுறுத்தும் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆசிரியர்கள் மாணவத் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு மீண்டும் நேற்றுமுன்தினம் அச்சுறுத்தல் துண்டுப்பிர சுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன என்று பல் கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. அத்துடன் அந்த துண்டுப் பிரசுரங்களில் குடாநாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகை களின் பத்திரி கையாளர்கள் இருவரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வாளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் போது காலை முதல் மதியம் வரை சுமார் 15 புலனாய்வாளர்கள் ஆலயத்தின் உள்ளே காணப்பட்டனர் என்றும் என்ன காரணத்துக்காக பூசைகள் நடைபெறுகின்றன என்பது குறித்த விவரங்களை அவர்கள் சேகரித்துக் கொண்டிருந்தனர் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கும்பாபிஷேகம் முடிவடைந்த பின்னர் அவர்களும் வெளியேறினர். அதன் பின்னர் குறித்த துண்டுப் பிரசுரங்கள் குறித்துத் தெரியவந்தது என்று பல் கலைக்கழகத் தரப்பு தெரிவித்துள்ளது.

இறுதி எச்சரிக்கை என்ற தலைப்பில் தேசம் காக்கும் படை வெளியிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் அந்த துண்டுப்பிரசுரத்தில் "யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் பயங்கரவாதத்தை வளர்க்க முற்படுவோர் தண்டிக்கப்படவுள்ளனர். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அந்தப் பயங்கர வாதத்தை யாழ்.பல்கலைக்கழகம் ஊடாக வளர்த்தெடுக்க முயற்சி செய்து வருகின்றனர். இவ்வாறு முயற்சி செய்யும் தேச விரோத சக்திகளை நாம் இனங் கண்டுள்ளோம். அவர்களில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் பீடாதிபதிகள் மாணவர்கள் ஆகியோர் இனங் காணப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்ந்து சில பத்திரிகையாளர்களும் செயற்பட்டு வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவர்களுக்கு பலமுறை எச்சரிக்கை கூறியிருந்தும் அவர்கள் திருந்துவதாக இல்லை. தொடர்ந்தும் மாணவர்க ளுடனும் ஆசிரியர்களுடனும் சேர்ந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது இவர்களுக்கு இறுதி எச்சரிக்கை ஆகும். இவர்கள் இனியும் திருந்தாவிட்டால் இறுதித் தீர்ப்பு மரண தண்டனையே. சிலருக்கு இறுதி நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. கடந்த எச்சரிக்கைகளைப்போல் இதனையும் சாதாரணமாகக் கருதிவிட வேண்டாம். உங்களுக்கு இவ்வுலகில் இருந்து விடுதலை நிச்சயம். "என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப்பிரசுரங்களால் பல கலைக்கழகத்தின் இயல்புநிலை மாறியுள்ளது என்றும் மாணவர்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது

# வடக்கு மாகாண கலைஞர்களுடன் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்.வலயக்கல்வி பணிமனையில் நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமானது. இதில் கலந்து கொண்ட அமைச்சர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், வடக்கிலுள்ள தமிழ் இளைஞர்களை கலைகள் மூலம் செழிப்பான வாழ்க்கையினை வாழ வழிவகைகளை நாம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். கலை, கலாச்சாரத்தில் பின்னோக்கி சென்றுள்ள எமது இளைஞர்களை கலைகளைக்கொண்டு நெறிப்படுத்த வேண்டும். தமிழரின் பாரம்பரியத்தைப்பேணிப்பாதுகாத்து பண்பாட்டை நிலைநிறுத்தவேண்டும். கலைகளையும் பண்பாட்டையும் வளர்க்க குழுக்களை அமைத்து ஆக்க பூர்வமான திட்டங்களை வகுக்கவேண்டும். இளைய தலைமுறையினரை கலை ஆர்வமுடையவர்களாக மாற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் முக்கிய அடையாளமாகவுள்ள பொதுநூலகப்பகுதியில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் வெசாக் கொண்டாட்டத்தினால் பௌத்தமதம் வியாபித்து காணப்படுகின்றது. ஒரு வேளை திடீரென யாராவது இங்கு வருவார்களேயானால் இது எந்த நாடு என்று கேட்க கூடியதாகயிருக்கும். காரணம் அவர்கள் யாழ்ப்பாணத்தைப்பற்றி அறிந்து வைத்திருப்பதற்கு எதிர்மறையான தோற்றப்பாட்டுடன் யாழ்ப்பாணம் தற்போது மாற்றப்பட்டுள்ளது புத்த பகவான் இங்கு வியாபித்திருக்கின்றார்.

பொது நூலகம், புல்லுக்குளம், துரையப்பா விளையாட்டரங்கு முனியப்பர் ஆலய வளாகம் எல்லாம் பௌத்த மயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்களின் பண்பாட்டுடனும் கலை கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் ஆடம்பரமாக இங்கு நடத்தப்படுவதில்லை. தமிழர்கள் மரபு ரீதியாக கொண்டாடி வரும் ஆடிப்பிறப்பு வரவுள்ளது இந்த நிகழ்வுகளைக் கொண்டாட எவரும் முன்வருவார்களோ தெரியவில்லை. அதே வேளை ஆடிப்பிறப்பிற்கு நாம் ஏன் கூல் குடிக்கின்றோம் என்பது கூட பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இவ்வாறான நிலையிலேயே தமிழரின் கலை கலாச்சாரம், பண்பாடுள்ளது.

தமிழரின் பாரம்பரியம் மிக்க திராவிட மரபுடைய கட்டடக்கலைகள் தற்போது காண்பதற்கு அரிதாகிவிட்டது. திராவிடக்கட்டடக்கலை நம்மவர் வீடுகளில் கேள்விக்குறியான நிலையிலுள்ள அதேவேளை அந்த மரபுகள் அழிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றது. எனவே எமது இனத்தின் பழைமை பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையினை உங்கள் முன்னிலையில் வைக்கின்றேன். நூற்றாண்டுகள் பழைமையான கட்டடங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளதோடு உருமறைப்பும் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தீஸ்வரா போன்ற பல பாடசாலைகள் திராவிடக் கட்டடக்கலைகளை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் காலம் போகப்போக அவை மாற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

தமிழரின் பழைமையைக்காண்பது தற்போது அரிதாகிப்போவிட்டது. பழைமைகள் புதுப்பிக்கப்படும் போது அவை அழகு படுத்தப்படவேண்டுமே தவிற அழிக்கபடக்கூடாது. ஈழத்தில் புகழ்பூத்த தமிழ் மன்னர்களில் ஒருரான பண்டார வன்னியனின் காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு மலர் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது அந்த மலரில் இடிந்து போன பழைய ஆலத்தின் தோற்றபடம் பிரசுரிக்கப்பட்டிருந்து. மிகவும் கம்பீரமான அந்த ஆலயம் போன்று தற்போது அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தினை அமைத்திருக்கலாம் என்று நான் எண்ணிக் கொண்டேன். இவ்வாறு காலத்துக்கு காலம் எமது பழைமை அழிக்கப்பட்டு வருகின்றது. இன்றும் பத்து வருடங்களுக்கு பின்னர் இதனைவிட மோசமான நிலைகள் ஏற்படக்கூடும்.

எனவே எமது கலை கலாச்சாரத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாக்க கலைஞர்கள், தமிழர்கள் முன்வரவேண்டும். மக்கள் மத்தியில் வழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் தமிழரின் அடையாளச் சின்னங்கள் சந்தைகளில் விற்பனையாகின்றன அவை பாதுகாக்கப்படவேண்டும். வடக்கிலிருந்து வெளியில் கொண்டு செல்லப்படும் அடையாளச்சின்னங்களை பொறுப்பேற்று பாதுக்காக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எமது இனம் சார்ந்த பண்பாட்டை சிறுவயதிலிருந்தே இளைய தலைமுறையினர்கது சொல்லிக்கொடுக்க வேண்டும். அவ்வாறு சொல்லிக் கொடுக்க தமிழர்கள் மறந்துவிட்டனர் அதன் வெளிப்பாடு தான் எமது இனத்துவ அடையாளங்கள் அ்ழிவுக்கு காரணம், எனவே எமது இனத்தின் கலை கலாச்சாரத்தை பேணிப் பாதுகாக்க பொதுவான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

# விவேகானந்த நகர் மக்களுக்கு கற்றல் உபகரணங்கள் உதவி

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் பா.உறுப்பினர் சி.சிறீதரனின் ஏற்பாட்டில் புலம் பெயர் தமிழ் உறவுகளின் உதவியில் கல்வி மேம்பாடு கருதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுவரும் நிலையில் அண்மையில் கிளிநொச்சி விவேகானந்த நகர் கிராமத்தின் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவின் விக்ரோறியா வாழ் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிளையின் அன்பர்கள் தமது உதவும் எண்ணத்தின் அடிப்படையில் பா.உறுப்பினர் சி.சிறீதரன் உடாக கற்றல் உபகரணங்களை வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி பிரதேசபையின் உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன் ஒழுங்குபடுத்தலில் அண்மை. யில் விவேகானந்தநகர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.இதில் பா.உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கியதுடன் வடமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை பளை பிரதேசசபையின் உறுப்பினர் சு.சுரேன் கட்சியின் செயற்பாட்டாளரகளான் மாறன் ஜெயக்குமார் விவேகானந்தநகர் கிராமத்தின் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிராம அலுவலர் சந்திரபாலன் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.இந்த கருத்துத் தெரிவித்த கிராமத்தை சேர்ந்தவரும் கரைச்சி பிரதேச சபையின் உபதவிசாளருமான நகுலேஸ்வரன்

எமது விவேகானந்தநகர் கிராமத்தின் மாணவர்களின் நலன்களை கருத்திற்கொண்டு இக்கிராமம் சார்பாக கற்றல் உபகரணங்களுக்கான வேண்டுகையை சமர்ப்பித்திருந்தோம். அதை பா.உறுப்பினர் சி.சிறீதரன் கருத்திலெடுத்து அவுஸ்திரேலியா விக்ரோறியா வாழ் தமிழ் அன்பர்களின் உதவியுடன் இங்கு வந்து கற்றல் உபகரணங்களை தந்து உதவியமைக்கு இம்மக்கள் சார்பாக நன்றி கூறும் கடமை எனக்குண்டு.கிளிநொச்சி மாவட்டத்தில் நகரை அண்டிய கிராமமாக நமது விவேகானந்தநகர் கிராமம் இருந்தபோதும் கணிசமான இந்த கிராமத்து மக்கள் இன்றும் அன்றாட கூலிகளாகவும் வாழ்வின் பொருளாதார தரத்தில் பின்னடைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். போருக்கு முன் மிகவும் செழிப்புடன் இருந்த மக்களில் பலர் இன்று மிகவும் ஏழைகளாக மாறியுள்ள அவல நிலை இருக்கின்றது. அதற்கு காரணம் இறுதிப்போரின்போது பலகுடும்பங்களின் உழைப்பாளர்கள் கொல்லப்பட்டுவிட்டதும் மற்றும் மிகவும் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டுவிட்டதும்தான். எதிர்காலத்துக்கான கல்வி அடித்தளத்தை வலுவாக இட்டுக்கொள்ள பாடுபடுவது தான் அதற்கு இப்படியான புலம்பெயர் உறவுகளின் ஆதரவு மிகுந்த துணையாக இருக்கும் என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலையின் சாட்சியம்

(நேற்றைய தொடர்ச்சி)

**பொஸ்பரஸ் குண்டு**

உடையார்கட்டு என்ற இடத்தில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டன. இந்த வகைக்குண்டுகள் வீசப்பட்டதும் கறுப்பு நிறப் புகை வெளியேறும். அத்துடன் இந்தக் குண்டு எங்கு வீசப்படுகின்றதோ அங்கே உள்ள அனைத்தும் எரிந்து கருகிவிடும்.

இந்த வகைக் குண்டுவீசப்பட்டவுடன் அதன் சுவாலை "தறப்பாலில்" பற்றி அதன் பகுதிகள் மக்கள் மீது விழுந்தவுடன் மக்கள் எரி காயங்களுக்கு உள்ளாயினர். பொஸ்பரஸ் குண் டொன்று வீசப்பட்ட போது அதன் சுவாலைகள் தற்காலிக கூடாரங்கள் மீது படர்ந்து பின் அங்கிருந்த பலரின் உடலிலும் பற்றிக் கொண்டது.

இதனால் மிக மோசமான முறையில் எரிகாயங்களுக்கு உள்ளாகினார். இதனை நான் நேரில் பார்த்தேன். பொஸ்பரஸ் குண்டுத்தாக் குதலுக்கு உள்ளாகி மிக மோசமான எரிகாயங்களுக்கு உள்ளாகி பலர் இறந்தார்கள்.

மேற்குறித்த கொத்துக் குண்டுகளும் பொஸ்பரசுக் குண்டுகளும் சர்வதேச போர் விதிமுறைகளின்படி தடைசெய்யப்பட்டவையாகும். அத்துடன் யுத்தத்தில் தவிர்க்கப்பட வேண்டிய இரசாயனக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டதை யுத்த வலயத்திற்குள் அகப்பட்டிருந்த மக்கள் நன்கறிவர்.

**எறிகணை, உந்துகணைத் தாக்குதல்கள்**

இரட்டைவாய்க்கால், அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, மாத்தளன் பகுதிகளில் எறிகணை தாங்கிகளின் கனரக துப்பாக்கிச் சூடு மற்றும் ஆர்பிஜி உந்துகணைத் தாக்குதல்கள் அகோரமாக நடத்தப்பட்டன. கடும் மழை பெய்துவந்த நிலையில் இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்தமையினால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி அவதிப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால், புது மாத்தளன் பகுதி இறுதி பாதுகாப்புவலயம் என இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அங்கு வந்து பதுங்கு குழி அமைத்து தங்கி நின்ற மக்கள் மீது பல் குழல் எறிகணைத் தாக்குதல் மற்றும் எரிவாயு பொஸ்பரஸ் குண்டுகளை வீசிய சிங்களம் கோர கொலை தாண்டவத்தை ஆடியது. இதில் பல நூற்றுகணக்கான மக்கள் எரிந்து அடையாளம் தெரியாத நிலையில் சாம்பலாகினர்.

கருகிய நிலையில் அடையாளம் காண முடியாத நிலையில் இனவெறி தாக்குதலினால் மரணித்த நூற்றுக்கணக்கான மக்களின் மனித உடலங்கள் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகளுக்குள் அடக்கம் செய்யப்பட்டன.



முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் அப்போது பாதுகாப்பற்ற சூழ்நிலையில் அங்கு சிக்குண்டுள்ள மக்களுக்கு எந்த மனிதாபிமான நிறுவனமும் உதவ முன்வராது தங்கள் பாதுகாப்பே முக்கியம் என்பதாக ஒதுங்கிக் கொண்டார்கள். பாவம் மக்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தமக்குத் தெரிந்த வழிமுறைகளைக் கைக்கொள்ள நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

**உணவு, குடிநீருக்கு நெருக்கடி**



கற்பனையும் செய்ய முடியாத அளவிலான மனிதப் பேரவலத்தைக் காண நேர்ந்தது. எந்த மனிதாபிமான தொண்டு நிறுவனமும் அங்குள்ள மக்களுக்கு உதவ முடியாத பாதகமான பாதுகாப்புச் சூழலே உருவாகி இருந்தது. குறுகிய நிலப்பரப்பில் சிக்குண்டுள்ள மக்கள் தமது கைகளாலேயே பதுங்கு குழிகளைத் தோண்டி அவற்றுக்குள் பாதுகாப்புத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதனால் குடிநீருக்கும் உணவுக்கும் பெரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அந்த மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு சமூகப் பணியாளர்களுக்குப் போதிய பாதுகாப்பும் தடைப்படாத போக்குவரத்து வசதியும் இல்லை. இப்போதைய நிலைமையிலும் மக்களுக்கு தொண்டாற்ற முனைந்த சமூகப் பணியாளர்கள் என்ற வகையில் சாவின் விளிம்பில் இருந்தும் பல உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது.

யுத்தம், ஈவு இரக்கமில்லாது கோரப் பசியோடு தமிழ் உறவுகளின் உயிர்களை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த காலமது. பட்டினியால் எல்லோரது வயிறுகளும் ஒட்டியிருந்தன. கண்ணீரோடு பதுங்கு குழிக்குள் வேதனை ஒருபுறம், ஆனால் குழந்தைகள் பசி பசி என கதறிய அழுகைக் குரல் தான் என்னுள் பெரிதும் வலியை ஏற்படுத்தியிருந்தது.

**கஞ்சிக்கு கை ஏந்தியவர்களையும் கொன்று குவித்தது சிங்களம்**

துப்பாக்கி ரவைகள் எல்லாத் திசைகளில் இருந்தும் இடையறாது வந்து கொண்டிருந்தன. தனியே செல்லவும் பயமாக இருந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு சிறிய குழி ஒன்றுக்குள் கையில் ஒரு கிண்ணத்தை எடுத்துக்கொண்டு வெளியே ஓடினேன். அரிசிக் கஞ்சி ஊற்றுகின்ற இடத்துக்குச் சென்று வாங்கிய கஞ்சியின் சூடு ஆறுவதற்கிடையில் ஓட்டமும் நடையுமாக கூடாரத்துக்கு திரும்பி வந்தேன்.

பல் குழல் எறிகணை வீச்சில் சிறுவர்கள் சிதையுண்டிருந்தார்கள். காப்பாற்றுவதற்காக நிறையவே போராட வேண்டியிருந்தது. கையிலிருந்த கிண்ணம் தன்பாட்டிலேயே கீழே வீழ்ந்தது. ஒருவர் தூரத்தே நிற்பதை பார்க்க முடிந்தது. காயம்பட்ட காலோடு இலையான்கள் மொய்த்துக் கொண்டிருக்க ஏக்கப் பார்வையோடு அவர் இருந்த கிடங்கின் அருகில் சென்று பார்த்த பொழுது அதுஒரு மாபெரும் மனித படுகொலைக் கிடங்காகவே காட்சியளித்தது.

ஆங்காங்கே மனிதச் சடலங்கள் குவிக்கப பட்டு இருந்தமையினால் நாம் காலடி வைக்கும் பொழுது கால்கள் இலகு வில் மண்ணுள் புதையுண்டன. சில கிடங்கு களில் மனிதச் சடலங்கள் அரைகுறையாக எரியூட்டப் பட்டுக் காட்சியளித்தன. உக்கிரத் தாக்குதலின் போது தம்மைப் பாதுகாக்க வேண்டி மக்களால் அவசரமாகத் தோண்டப்பட்ட பாதுகாப்புக் கிடங்குகளினுள் அத்தாக்குதலில் கொல்லப்பட்ட பல நூற்றுக்கணக்கான மக்களின் சடலங்கள் அங்கேயே புதைக்கப்பட்டன.

தொடர்ந்தும் இழப்புக்களை சந்திக்க முடியாத நிலையில் மக்கள் அனைவரும் படையினரிடம் சரணடைந்தனர். வெட்டுவாய்க்கால் (வட்டு வாகல்) பாலத்தினைச் சரணடைந்த மக்கள் கடந்து சென்ற சந்தர்ப்பத்தில் மக்களிலிருந்து போராளிகளைப் பிரித்தெடுத்தனர்.

புலிகளில் இருந்தவர்கள் ஒருபுறம் வருமாறு கூறி, அவர்கள் ஒரு சின்ன விசாரணைக்குப் பிறகு குடும்பத்துடன் போகலாம் என்று பலமுறை அறிவித்த பின்பு, விசாரணையின் பின் மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கையுடன் போராளிகள் பலர் படையினரிடம் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்களைப் படையினர் வாகனத்தில் ஏற்றும் சமயம் அங்கிருந்தவர்கள் அடக்கி வைத்திருந்த அத்தனை சோகங்களோடும் பெயர் தெரியாத சிப்பாய்களின் கால்களில் விழுந்து கதறினார்கள். அவர் களின் கண்களைக்கட்டி அழைத்து சென்ற இராணுவத்தினர், பின்னர் அவர்களின் ஆடைகளைக் களைந்து சித்திரவதைகளின் பின்னர் படுக்கொலை செய்தார்கள்.

மக்களில் கதறல்கள் மற்றும் கெஞ்சல்கள் இராணுவத்தினரின் மனங்களைக் கொஞ்சம் கூட அசைக்கவில்லை. மீண்டும் அடிமை வாழ்வு தொடர்ந்தது. பல இடைத்தங்கல் முகாம்கள் பல நலன்புரி நிலையங்கள் பல தடுப்பு முகாம்களும் உருவெடுத்தது. பல்லாயிரக்கணக்கானோர் தம் உறவுகளைத் காண அலைந்து திரிந்தார்கள்.

உடற்காயங்கள், உளக்காயங்கள் என்பவற்றுடன், அன்புக்குரியவர்களைக் காணவில்லை என்பது அச்சுறுத்தல்களுக்குக் கீழான அடிமை வாழ்வும் மக்களை மேலும் உறுத்தின.

தமிழர்களின் பாரம்பரிய பூமியை அபகரித்து அங்கு வாழ்ந்த பூர்விகக் குடிகளை அகதிகளாய் துரத்தி இன்று திறந்த வெளிச்சிறைக்குள் பணயக் கைதிகளாய் தமிழர்களை சிங்களம் இன்னமும் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைத்திருப்பதும் தமிழர்கள் சொந்த இடங்களிற்கு மீள் திரும்பி சென்று குடியேற முடியாத சூழ்நிலை உள்ளது குறிப்பிடதக்கது.

பல நிலங்கள் இராணுவத்தினதும் கடற்படையினதும் உல்லாச விடுதிகளுக்கு என அரசினாலேயே கவரப்பட்டிருப்பது உலகிற்கே இப்போது தெரிந்திருக்கிறது.

இதற்கிடையில், தமிழர்கள் தமது இழந்த உறவுகளுக்காக துக்கம் கொண்டாட முடியாது என்று இராணுவம் அறிவித்திருக்கிறது. ஆனால், தெற்கில் யுத்த வெற்றி விழா கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, புத்த மக்கள் அதிகம் வாழாத தமிழர் பகுதிகளில் வெசாக் தினக் கொண்டாட்டங்களை இராணுவத்தின் முழுமையான ஈடுபாட்டுடன் அரசு செய்கிறது. வெசாக் கூடுகளும் புத்தரின் வாழ்க்கைக் கதைகளைக் காட்டும் கொடிகளும் பதாகைகளுமாக இந்த ஏற்பாடுகள் பரபரக்கின்றன. கூடவே, வாள் ஏந்திய துட்டகைமுனுவின் சிங்கக்கொடிகளும் ஆதிக்கத்தின் அடையாளத்தைக் காட்டி நிற்கின்றன.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னாலாவது அனைத்து தமிழர்களும், அவர் தம் அமைப்புகளும் ஒன்றிணைந்து. எமது தேசிய விடுதலைக்காக ஒன்றுபட்டு போராடுவோம். இது வரலாற்றுக் கடமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் வயோதிப பெண் கைது


(மட்டக்களப்பு)
ஏறாவூர், புன்னக்குடா வீதியில் 30 கட்டு கஞ்சாவுடன் 60 வயது வயோதிபப் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏறாவூர் புன்னக்குடா வீதியில் உள்ள ஜென்பர் ஸகர்வன் (60 வயது) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றப் புலன் விசாரணைப் பிரிவு உதவிப் பொலிஸ் பரிசோதகர் கே.அமில தலைமையிலான ஏ.ரி.எம்.சுபியான் (61217) தமிழ்ச்செல்வன் (67995), மஜீத் (80044), பிரியங்கர (66426) ஆகிய பொலிஸ் குழுவினரே, குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வயோதிபப் பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## காலாவதியான பொருட்களை வைத்திருந்த உரிமையாளருக்கு தண்டம்



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான் குடி பிரதேசத்திலுள்ள பலசரக்குக் கடையொன்றில் பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான உணவுப் பொருட்களை வைத்திருந்த கடை உரிமையாளருக்கு தண்டம் விதிக்கப் பட்டுள்ளது.


மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் என்.எம்.அப்துல்லாஹ் 18,000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித் துள்ளார். அத்துடன், கடையிலிருந்து கைப்பற்றப்பட்ட பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான உணவுப் பொருட்களை அழிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கடை உரிமையாளரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்திய போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இக்கடையிலிருந்து பழுதடைந்த 550 கிலோ அரிசி, 100 கிலோ வெள்ளைப் பூடு, 325 கிலோ பழப்புளி, 200 கிலோ கொத்தமல்லி, 600 கிலோ கடலை ஆகியனவும் காலாவதியான மற்றும் லேபல் ஒட்டப்படாத ஜாம் வகைகள், பிஸ்கட்டுக்கள், நூடில்ஸ் ஆகியனவும் நேற்று கைப்பற்றப்பட்டன.

மேற்படி கடையில் பழுதடைந்த உணவுப் பொருட்கள் காணப்படுவதாக காத்தான்குடி பொதுச் சுகாதார பரிசோதகர் களுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீனின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகரான ஏ.ஏ.எம்.றபீக், பொதுச்சுகாதார பரிசோதகர்களான ஏ.எல்.றஹ்மத்துல்லாஹ், கே.சங்கர், எம்.மிதுன்ராஜ், ரி.கருணாகரன் ஆகியோர் இக்கடையில் சோதனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியல் நோக்கிலானது - ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியல் நோக்கிலானது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசி யக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. தீர்மானத்திற்கு எமது ஆதரவு பெற்றுக் கொள்ள முடியும் என ஐக்கிய தேசியக்கட்சி எண்ணியிருந்தால் அது அவர்களின் முட்டாள் தனத்தையே பிரதிபலிக்கின்றது.

போதைப் பொருள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த அரசாங்கம் பல்வேறு வழிகளில் நடவடிக்கை எடுத்து வருகின்றது. போதைப் பொருள் கடத்தல், வைத்திருத்தல் மற்றும் விநியோகம் போன்ற குற்றச்சாட்டின் பேரில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

## மஞ்சள் கடவையில் வேகமாக சென்ற வான் இளைஞன் மீது மோதி விபத்து



(கொழும்பு)
திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை பிரதேசத்தில் பாதசாரி கடவையில் வைத்து நேற்று புதன்கிழமை பிற்பகல் வான் ஒன்று இளைஞன் மீது மோதியதால் படுகாய மடைந்த இளைஞன் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேன் வேகமாக சென்றதன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞனின் நிலைமை மிக மோசமாக இருப்பதனால் நாவலப்பிட்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு விபத்துக்குள்ளாகியவர் நுவரெலியா லபுக்கலை பிரதேசத்தில் வசிக்கும் மாரிமுத்து துஷாந்தன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேற்படி வான் கண்டியிலிருந்து நுவரெலியாவிற்கு சென்றதாகவும், குறித்த வானையும் சாரதியையும் கைது செய்த தாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்த சாரதியை நாளை ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிளவடைந்துள்ள அரசாங்கத்தை ஒன்றிணைக்கவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம்




(கொழும்பு)
பிளவடைந்துள்ள அரசாங்கத்தை ஒன்றிணைக்கும் வகையில் அமைந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் அனுர குமார பிளவடைந்துள்ள அரசாங்கத்தை ஒன்றிணைக்கும் வகையில் நம்பிக்கையில்லா தீர்மானம் அமைந்துள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் பெரும்பான்மை பலம் அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது. இவ்வாறான தீர்மானங்கள் மிகவும் சூட்சுமமான முறையில் கொண்டு வரப்பட வேண்டும். கடந்த தேர்தல்களின் போது மக்கள் அரசாங்கத்திற்கு சிகப்பு எச்சரிக்கை வழங்கியிருந்தனர். எனினும், இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் பிளவடைந்துள்ள அரசாங்கத்தினை மீள ஒன்றிணைக்கும் வகையில் அமைந் துள்ளது.

நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டிய பல சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்படவில்லை. இன்றைய சூழ்நிலையில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதன் பின்னணி குறித்து கேள்வி எழுந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பங்களாதேசில் இலங்கை மாணவன் மரணம்



பங்களாதேசில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்றுவரும் இலங்கையைச் சேர்ந்த மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

பங்களாதேஸ் சிட்டகொங், பகுதியில் கூரை மேலிருந்து கீழே விழுந்து 23 வயதுடைய எசான் இர்பான் என்ற மாணவனே உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

குறித்த மாணவன், வைத்தியத்துறையில் இறுதி ஆண்டில் கல்வி கற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூரையில் இருந்து விழுந்து படுகாயமடைந்த குறித்த இளைஞனை, அவருடைய நண்பர் சிட்டகொங் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து சிட்டகொங் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் மரணம்! மனைவி சந்தேகம் தெரிவிப்பு

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி விடுதி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர் பிரான்ஸ் கமிலாஸின் (வயது 37) மரணத்தில் தனக்கு சந்தேகம் உள்ளது என்று அவரின் மனைவியான மஹேசா கமிலாஸ் தெரிவித்தார். மஹேசா, தனது கணவரின் மரணம் தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது.

எனக்கும் எனது கணவருக்கும் இடையில் எவ்வித குடும்பப் பிரச்சினையும் இல்லை. கடந்த 6 வருடங்களாக நாங்கள் இருவரும் மிகவும் சந்தோசமாகவே வாழ்ந்து வருகின்றோம். இறுதியாக அவர் என்னுடன், கடந்த திங்கட்கிழமை பேசினார். ஒவ்வொரு நாளும் எனக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி என்னுடன் கதைப்பார். ஆனால், நேற்று செவ்வாய்க்கிழமை அவரது கையடக்கத் தொலைபேசிகள் இரண்டும் இயங்கவில்லை. அவ்விரண்டு தொலைபேசிகளுக்கும் பலமுறை தொடர்பை ஏற்படுத்த முயன்றேன். ஆனால் அது பயனளிக்கவில்லை.

அதன்பின்னர், அவருடைய நண்பர் ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தி விடயத்தை தெளிவுபடுத்தி, கல்லூரியில் உள்ள அவரது விடுதி அறையைச் சென்று பார்வையிடுமாறு கோரினேன். அந்த நண்பர், நேற்று இரவு 1 மணியளவில் கல்லூரியின் விடுதி அறைக்குச் சென்று பார்த்துள்ளார்.

இதன்போது, குறித்த அறை மூடப்பட்டுள்ளதாகவும் ஜன்னல் வழியாக அறைக்குள் பார்த்த போது அவரின் கால்கள் மாத்திரம் தெரிந்ததாகவும் கூறிய நண்பர், இது தொடர்பில் எழுந்த சந்தேகத்தை அடுத்து பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119க்கு அழைப்பை மேற்கொண்டு தகவல் தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர், அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், அறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது தூக்கில் தொடங்கிய நிலையில் எனது கணவர் மரணித்துக் கிடந்துள்ளார்.

இதேவேளை, சடலம் தொடர்பான பிரேதப் பரிசோதனையின் பின்னரே இது தற்கொலையா அல்லது யாரும் கொலைசெய்து கட்டித்தூக்கினார்களா என்று சொல்ல முடியும் என பிரேத [illegible] அதிகாரி கூறினார்.

## இரத்தினபுரி மாநகர பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் பூட்டு



இரத்தினபுரி மாநாகர சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகள் இன்னைத்தும் 22, 23ம் திகதிகளில் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ள டெங்கு நுளம்பு ஒழிப்புத் திட்டம் காரணமாக பாடசாலைகளை மூடத் தீர்மானித்துள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் செய்தது தவறு தான் மக்களிடம் மன்னிப்பு கேட்ட கெஜ்ரிவால்



(புதுடெல்லி)
டெல்லி முதல்வர் பதவியிலிருந்து விலகியதற்காக மக்களிடம் மன்னிப்பு கோருவதாக ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார். டெல்லியில் மீண்டும் ஆட்சி அமைக்க ஆம் ஆத்மி கட்சி ஆயத்தமாகி வருகிறது.

இதனை அடுத்து இன்று கெஜ்ரிவால் வீட்டில் ஆம் ஆத்மி கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது. பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அரவிந்த் கெஜ்ரிவால், ஆம் ஆத்மி கட்சி டெல்லியில் புதிய தேர்தலை சந்திக்க விரும்புகிறது. மீண்டும் ஆட்சி அமைப்பது குறித்து பொது மக்களிடம் வாக்கெடுப்பு கிடையாது.

நாங்கள் ஆட்சியில் இருந்து விலகியதால் டெல்லி மக்கள் மிகவும் வருத்தம் அடைந்திருப்பார்கள். எங்களுடையை தவறுக்காக அவர்களிடம் நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். டெல்லியில் மீண்டும் ஆட்சி அமைப்பது தொடர்பான முயற்சிகளை ஆம் ஆத்மி கட்சியினர் மேற்கொண்டு வரவதற்கு பாஜக மற்றும் காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகளை மீறியதாக 12 ரஷ்யர்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை

(வாஷிங்டன்)
அமெரிக்காவின் நிதித்துறை அமைச்சகம் கடந்த 2008ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெற்ற 230 மில்லியன் அமெரிக்க டாலர் வரித்தள்ளுபடி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறி 12 ரஷ்யர்களுக்கு நேற்று பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இந்தத் தீர்ப்பு கடந்த 2012ஆம் ஆண்டில் அந்நாட்டில் ரஷ்ய வழக்கறிஞரான செர்ஜி மேக்னட்ஸ்கியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் தனது வாழ்நாளில் அமெரிக்காவில் பிறந்த இங்கிலாந்து முதலீட்டாளரான வில்லியம் பிரௌடர் என்பவரின் ஹெர்மிடேஜ் நிதி மேலாண்மை என்ற நிறுவனத்தின் கணக்கீடுகளைத் தணிக்கை செய்து வந்தார். பல பில்லியன்கள் முதலீட்டைக் கொண்டிருந்த இந்த நிறுவனத்தில் கடந்த 2008ஆம் ஆண்டில் ரஷ்ய அரசு அலுவலர் ஒருவருடன் இணைந்து 230 மில்லியன் டாலர் அளவிற்கு வரித் தள்ளுபடி மோசடி நடந்ததை இவர் கண்டுபிடித்தார்.

ஆனால், வரி ஏய்ப்பு செய்ததாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இவர் அங்கு துன்புறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவிற்கு சிகிச்சையும் மறுக்கப்பட்டதால் 37 வயதிலேயே அவர் இறந்தும்போனார். இந்த நிகழ்ச்சி மனித உரிமை ஆர்வலர்களிடையே பெரும் கண்டனத்தை எழுப்பியதோடு அதன் விளைவு ஐரோப்பா முழுவதும் வெளிப்பட்டது. ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே உணர்வுப்பூர்வமான சர்ச்சைகள் தோன்றியதோடு அமெரிக்க நிதியுதவி பெற்றுவந்த பல அரசுசாரா ரஷ்ய அலுவலகங்களுக்கான அனுமதியும் அமெரிக்காவில் மறுக்கப்பட்டது. அதுமட்டுமின்றி அமெரிக்கத் தம்பதியினர் ரஷ்யக் குழந்தைகளைத் தத்தெடுப்பதுவும் இந்த சம்பவத்தினால் தடை செய்யப்பட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு செர்ஜியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் கீழ் இந்த வரித் தள்ளுபடி மோசடி விசாரிக்கப்பட்டு இதற்கான தீர்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதில் நான்கு சிறை அலுவலர்கள், நீதிபதி, நீதிமன்ற அலுவலர், சட்ட அமலாக்க புலன் விசாரணையாளர் உட்பட மொத்தம் 12 நபர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் 2009ல் செர்ஜி இறப்பதற்கு காரணமாக இருந்ததாக அப்போது அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்த புடிர்கா மருத்துவ மையத்தின் தலைமை மருத்துவ அதிகாரியாக இருந்த டாக்டர் டிமிட்ரி கிரடோவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

## நைஜீரியாவில் இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்புக்கு 118 பேர் பலி



(நைஜர்)
மத்திய நைஜீரியாவின் ஜோஸ் நகரில் அடுத்தடுத்து இரண்டு கார் குண்டுகள் வெடித்ததில் 118 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர்.

நியூ அபுஜா மார்க்கெட் பகுதியில் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3 மணியளவில் முதல் தாக்குதலும், சுமார் அரை மணி நேரம் கழித்து, மினி பஸ் மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரை மோதவைத்து இரண்டாவது தாக்குதலும் நடத்தப்பட்டது. இவ்விரு தாக்குதல்களிலும் 118 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. குண்டுகள் வெடித்த இடத்தில் உள்ள பல வீடுகளும், கடைகளும் இந்த தாக்குதலில் பலத்த சேதம் அடைந்தன. சில கட்டிடங்களில் கொழுந்து விட்டெரியும் தீயை அணைக் க மீட்புப் படையினர் கடுமையாக போராடி வருகின்றனர்.

ஜோஸ் நகரில் போக்கோ ஹரம் தீவிரவாதிகளின் ரகசிய முகாம்கள் அதிகம் இருப்பதால் இந்த தாக்குதலை அவர்கள் தான் நடத்தியிருக்கக் கூடும் என் போலீசார் கருதுகின்றனர்.

## ஐ.நா. உச்சி மாநாட்டில் பங்கேற்க மோடி அமெரிக்காவுக்கு வருவார்

### பான் கி மூன் நம்பிக்கை

(நியூயார்க்)
இந்தியப் பிரதமராக விரைவில் பொறுப்பேற்கும் நரேந்திர மோடி நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. பொதுச்சபையில் நடைபெறவுள்ள பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் பங்கேற்க விரைவில் அமெரிக்காவுக்கு வருகை தருவார் என்று நம்புவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக, அவரது செய்தி தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், "ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்திற்கு, குறிப்பாக, பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் பங்கேற்க நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு வருகை தருவார் என்று மிகவும் நம்புகிறோம். பருவநிலை மாற்றம் தொடர்பான விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. வரும் செப்டம்பர் மாதம் நியூயார்க்கில் நடைபெறும் உச்சி மாநாட்டின்போது அவரை காண்போம் என்று நம்புகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

குஜராத் கலவரத்தை காரணம் காட்டி மோடிக்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்து இருந்தது. இந்நிலையில் உலகின் பெரிய தலைவரான பான் கி மூன் சார்பில் அமெரிக்காவுக்கு வருமாறு மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மோடி இந்தியாவின் நிக்சன் சீனா புகழாரம்



(பெய்ஜிங்)
மோடி இந்தியாவின் "நிக்சன்" என சீனா புகழாரம் சூட்டியுள்ளது. இந்தியாவின் புதிய பிரதமராக மோடி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை சீனா வரவேற்றுள்ளது. அவர் இந்தியாவின் நிக்சன் என புகழாரம் சூட்டியுள்ளது.

இவர் சீனாவுடன் ஆன வர்த்தக உறவை மேலும் விரிவுபடுத்துவார். அவரது அணுகுமுறை செயல்திறன் மிக்கதாகவும், வேதாந்த கொள்கை நிறைந்ததாகவும் இருக்கும். சீனாவுடன் மிக நெருக்கமாக இருப்பார் என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த 1970ம் ஆண்டுகளில் அமெரிக்க அதிபராக ரிச்சர்ட் நிக்சன் இருந்தார். அவர் 1972ம் ஆண்டில் சீனாவுக்கு வருகை தந்தார். அந்த கால கட்டத்தில் அமெரிக்கா சீனா இடையேயான உறவு "பனிப்போர்" போன்று இருந்தது.

ஆனால் நிக்சனின் வருகைக்கு பிறகு சீனா-அமெரிக்கா இடையேயான உறவு வலுப்பட்டு பனிப்போர் விலகியது. அதன் காரணமாக சீனாவில் இன்னும் நிக்சன் மீது மதிப்பும் மரியாதையும் உள்ளது. மோடி குஜராத் முதல்மந்திரி ஆக இருந்த போது 3 தடவை சீனா சென்றுள்ளார். இறுதியாக கடந்த 2011ம் ஆண்டில் அங்கு சென்றபோது வதோதரா அருகே ரூ.400 கோடி செலவில் அதிக மின்திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்து சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஆனது.

மோடிக்கு சீனாவுடன் ஏற்கனவே நல்லுறவு உள்ளது. எனவே தான் அவரை நிக்சனுடன் சீனா ஒப்பிட்டு புகழாரம் சூட்டியுள்ளது. இதற்கிடையே சீன அரசின் நிபுணர் லியூஷாங்யீ மோடி பற்றி குறிப்பிடும் போது, அவர் ஒரு வரம் பற்ற அதிகாரம் படைத்தவர்.

அவர் பிரதமரானதும் நிக்சன் போன்று சீனாவுடன் ஆன உறவை மேலும் ஊக்கப்படுத்துவார் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## விவாகரத்தான மனைவிக்கு ரூ.2700 கோடி ஜீவனாம்சம்



(ஜெனீவா)
உலகின் பெரும் செல்வந்தர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள ரஷ்யாவை சேர்ந்த பிரபல கோடீஸ்வரர் ஒருவர் தனது மனைவியை விவாகரத்து செய்ய 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை ஜீவனாம்சமாக தர வேண்டும் என்று சுவிட்ஸர்லாந்து நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் பிரபல கோடீஸ்வரர் ஆலிகாச் ட்மிட்ரி ரைபோலோவ்லேவ். இவர் 8.8 பில்லியன் (ஒரு பில்லியன் என்பது நூறு கோடி) அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள சொத்துகளுக்கு சொந்தக்காரர் என்று "ஃபோர்ப்ஸ்" பத்திரிகை இந்த ஆண்டு அறிவித்துள்ளது. ரஷ்யாவில் பிரபல உர தொழிற் சாலை உள்பட பல்வேறு தொழில்களை நடத்தி வந்த இவர், மோனாக்கோ கால்பந்து கிளப்பின் தலைவராகவும் உள்ளார். இவரிடம் இருந்து விவாகரத்தும், ஜீவனாம் சமும் கேட்டு சுவிட்சர்லாந்தை சேர்ந்த இவரது மனைவி ஜெனீவா கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

சுமார் ஆறாண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி, ஆலிகாச் ட்மிட்ரி ரைபோலோவ்லேவ்-வின் சொத்து மதிப்பை கருத்தில் கொண்டு, விவாகரத்து செய்யும் முன்னாள் மனைவிக்கு 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை அவர் ஜீவனாம்சமாக தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

உலக விவாகரத்து வழக்குகளைப் பொருத்த வரையில், இதுவரை விதிக்கப்படாத மிகப் பெரிய ஜீவனாம்சம் என்று கருதப்படும் இந்த தொகையை தந்து விட்டால், ஆலிகாச் ட்மிட்ரி ரைபோலோவ்லேவ்-வின் சொத்தில் பாதி கரைந்து விடும். எனவே, ஜெனிவா கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உள்ளதாக அவரது வக்கீல்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு ஆரோக்கியம் தரும் சில கெட்ட பழக்கங்கள்

வீட்டில் பெற்றோர்கள், நம்மிடையே உள்ள சில கெட்ட பழக்கங்களை பார்த்து சத்தம் போடுவார்கள். ஆனால், அந்த கெட்ட பழக்கங்களும் உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தை கொடுக்கத்தான் செய்கின்றன. அந்த மாதிரியான கெட்ட பழக்கங்களை இங்கே பட்டியலிட்டுள்ளோம், பாருங்கள்.

**நகம் கடிப்பது**



சிறு குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரிடமும் இருக்கும் ஒரு பொதுவான பழக்கம் தான் நகம் கடிப்பது. இதை கெட்ட பழக்கம் என்று நினைக்கிறோம். ஆனால் ஆய்வு ஒன்று, நகங்களை கடிப்பது ஒரு நல்ல பழக்கம் என்று சொல்கிறது.

ஏனெனில், நகங்களை கடிக்கும் போது, உடலின் நோய் எதிர்ப்பு சக்தியானது அதிகரிக்கப்படுகிறது. எனவே நகம் கடிக்கும் பழக்கம் இருந்தால், அது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான ஒரு பழக்கமாகும்.

**சொடக்கு எடுப்பது**



சொடக்கு எடுப்பது கெட்ட பழக்கமாக இருக்கலாம். மேலும் இது மூட்டுகளை வலுவிழக்கச் செய்யும் என்று பலர் சொல்வார்கள். அது உண்மையல்ல. ஏனென்றால், சொடக்கு எடுப்பதால், விரல் மூட்டுகள் நன்கு ரிலாக்ஸாவதோடு, விரல்கள் நன்கு செயல்படும்.

**துப்புதல்**



அடிக்கடி எச்சில் துப்புவது எரிச்சலை ஏற்படுத்துவதோடு, அது ஒரு கெட்ட பழக்கம் என்று சொல்வோம். ஆனால் எச்சில் துப்புதலும் ஒரு உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் ஒரு நல்ல பழக்கம் தான்.

எப்படியெனில், எச்சில் துப்பினால், சுவாசிக்க எளிதாக இருக்கும். அதுமட்டு மல்லாமல், உடற்பயிற்சி செய்யும் போது, வாயில் அதிகப்படியான எச்சிலானது சுரக்கும். அவ்வாறு சுரக்கும் எச்சிலை உடனே துப்பினால், நன்கு நிம்மதியாக சுவாசிக்கலாம்.

**அதிகமான தூக்கம்**



பெரும்பாலான வீடுகளில், விடுமுறை நாட்களில் நீண்ட நேரம் தூங்கும் பழக்கம் இருக்கும். பலர் இத்தகைய பழக்கத்தை ஆரோக்கியமற்ற பழக்கம் என்று சொல்வார்கள்.

ஆனால் உண்மையில் இது ஒரு நல்ல பழக்கம். அதிலும் வாரத்திற்கு ஒரு முறை இவ்வாறு நீண்ட நேரம் தூங்கினால், ஞாபக சக்தியானது அதிகரிக்கும்.

**பெட் காபி மற்றும் காலை உணவு**



சிலருக்கு படுக்கையிலேயே உணவை உண்ணும் பழக்கம் இருக்கும். இந்த பழக்கத்தை மிகவும் மோசமான பழக்கம் என்று சொல்வார்கள்.

ஆனால் இந்த பழக்கத்தை மேற்கொண்டால், செரிமான பிரச்சினையில் இருந்து விடுபடலாம். வேண்டுமெனில் முயற்சித்து பாருங்கள்.

**உடற்பயிற்சியை தவிர்ப்பது**



ஆம், உண்மையில் தினமும் உடற்பயிற்சியை மேற்கொண்டு, திடீரென்று அவற்றை சிறிது நாட்கள் தவிர்த்தாலும் உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானது.

எப்படியெனில், இவ்வாறு உடற்பயிற்சியை திடீரென்று தவிர்க்கும் போது, உடற்பயிற்சியினால் தசைகளில் ஏற்பட்ட காயங்களானது குணமாகி, மறுமுறை உடற்பயிற் சியை மேற்கொள்ளும் போது வலுவுடன் செயல்பட முடியும்.



**சூயிங்கம்**

கெட்ட பழக்கத்திலேயே மிகவும் மோசமானது என்று சொல்வது சூயிங் கம்மை மெல்லுவது தான். அதிலும் பேசிக் கொண்டிருக்கும் போது சூயிங் கம்மை மென்றால், மற்றவர்களுக்கு அது எரிச்சலை உண்டாக்கும். மேலும் திமிர் அதிகம் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தும்.

ஆனால் சூயிங் கம்மை மெல்லுவது உடலுக்கு மிகவும் நல்லது. அதிலும் இந்த பழக்கத்தால், மூளையானது நன்கு செயல்படுவதோடு, அடிக்கடி பசி ஏற்படும் உணர்வைத் தடுக்கும்.

இவை அனைத்தும் நல்ல பழக்கங்கள்தானே என்று கருதி நகம் கடிப்பது, சூயிங்கம் மெல்வது உள்ளிட்ட பழக்கங்களை புதிதாக கற்றுக் கொள்ள நீங்கள் விரும்பாதீர்கள்.


# புகைப்பட அல்பத்தை சிறந்த முறையில் உருவாக்க கூகுள் தரும் வசதி

கூகுள் நிறுவனம் தனது கூகுள் பிளஸ் சமூக வலைத்தளத்தில் புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

Google Stories எனும் இவ் வசதியின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எடுத்துக் கொண்ட புகைப் படங்களை அடிப்படையாகக் கொண்டு சிறந்த அல்பத்தினை உருவாக்க நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

புகைப்படங்கள் தவிர வீடியோக்களையும் அல்பங்களாக மாற்றியமைத்துக்கொள்ள முடிவதுடன், இந்த வசதியினை அன் ரோயிட், iOS சாதனங்களிலும் பயன்படுத்தக்கூடிய அப்பிளிக்கேஷனை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இனி டுவிட்டரில் இசைக்கும் இன்னிசை



இசையை பகிரும் வசதியை அளிப்பதற்காக ஜேர்மனியின் சவுண்ட் கிளவுட் நிறுவனத்தை வாங்க டுவிட்டர் வலைத்தளம் திட்டமிட்டுள்ளது.


டுவிட்டர் வலைத்தளம் ரூ.750 கோடி நஷ்டத்தில் இயங்கிவருகிறது. இந் நிலையில் இசை பகிர்வு தளமான ஜேர்மனியின் சவுண்ட் கிளவுட் நிறுவனத்தை டுவிட்டர் வாங்க திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் டுவிட்டர் பயனாளிகள், கூகுளில் படங்கள், காணொளிகளை தேடுவதைப்போல, இதில் இசையே தேடி கண்டுபிடிக்கலாம்.

கடந்தாண்டு இதுபோன்ற ஒரு வசதியை அளிக்க முயன்ற டுவிட்டர் அதில் தோல்வியை தழுவியது. சவுண்ட் கிளவுட் நிறுவனத்தை வாங்குவதன் மூலம் தனது 250 மில்லியன் பயனாளிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க டுவிட்டர் திட்டமிட்டுள்ளது.

இருப்பினும் அந்த நிறுவனம் இத் தகவலை இன்னும் உறுதிபடுத்தாமலேயே வைத்துள்ளது.

# iOS சாதனங்களுக்கான Super Monkey Ball Bounce ஹேம் அறிமுகம்




Sega எனும் ஹேம் வடிவமைப்பு நிறு வனம் அப்பிள் நிறுவனத்தின் iOS சாதனங்களுக்காக Super Monkey Ball Bounce எனும் புதிய ஹேமினை அறிமுகம் செய்துள்ளது.

இக்ஹேமானது Super Monkey Ball எனும் ஹேமின் புதிய பதிப்பாக வெளிவந்துள்ளது. முன்னைய பதிப்பினை விடவும் புதிய வடிவமைப்பினைக் கொண்டுள்ள இக்ஹேம் iOS 5 இற்கு பிந்திய இயங்குதளப் பதிப்புக்களில் செயற்படக்கூடியதாக இருக்கும்.

மேலும் தற்போது கனேடியன் அப்பிளிக்கேஷன் ஸ்டோர்களில் மட்டும் காணப்படும் Super Monkey Ball Bounce ஹேம் விரைவில் அனைத்து அப்பிளிக்கேஷன் ஸ்டோர்களிலும் கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்காக Samsung அறிமுகம் செய்யும் டேப்லெட்



Samsung Galaxy Tab 4 Education என அழைக்கப்படும் இந்த டேப்லெட் 10.1 அங்குல அளவு, 1280x 800 Pixel Resolution உடைய தொடு திரையினைக் கொண்டுள்ளது.

பல புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய மொபைல் சாதனங்களை தொடர்ச்சியாக அறிமுகம் செய்துவரும் சம்சுங் நிறுவனம், தற்போது மாணவர்களுக்கு பயன்படக் கூடிய டேப்லெட்டினை அறிமுகம் செய்துள்ளது.

இவற்றுடன் 1.2பூர்ண வேகத்தில் செயற்படக்கூடிய Quad Core Processor, பிரதான நினைவகமாக 1.5GB RAM> 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. இதன் விலை 369.99 டொலர்கள் ஆகும்.

# இரு தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஸ்மார்ட் கடிகாரம்

Kairos எனும் நிறுவனம் பொறியியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பங்களை ஒருங்கே கொண்ட ஸ்மார்ட் கடிகாரத்தினை உருவாக்கியுள்ளது. இக்கடிகாரமானது ஒளி ஊடுபுகவிடவல்ல OLED திரையினைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் வயர்லெஸ் தொழில்நுட்பமான புளூடூத், ரேடியோ, போன்றனவும் தொடர்ச்சியாக 7 நாட் களுக்கு மின்னை வழுங்கக் கூடிய தும், சார்ஜ் செய்யக்கூடியதுமான 180mAh மின்கலமும் காணப்படுகின்றது. தற்போது இக்கடிகாரத்திற்கு முன்பதிவு செய்ய முடிவதுடன் எதிர்வரும் ஜுலை 1ம் திகதி விற்பனைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானம்

(கொழும்பு)
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்வரும் 3ம் திகதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டமொன்றில் ஈடுபடவுள்ளனர். சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஆய்வுகளுக்கான கொடுப்பனவுகளுக்கு நிபந்தனை விதிக்கக் கூடாது, தனியார் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்த வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்தல், பல்கலைக்கழக மாணவர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதனை தடுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் பாரியளவில் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என பல்கலைக்கழ விரிவுரையாளர் தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சிராணியின் கணக்குகளை காட்டுமாறு நீதிமன்றம் மீண்டும் வங்கிக்கு உத்தரவு



(கொழும்பு)
பிரதம நீதிவான் கிஹான் பிலபிட்டிய நேற்று தேசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகளுக்கு மூன்றாவது தடவையாகவும் உத்தரவு ஒன்றை பிறப்பித்தார்.

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க மீது சுமத்தப்பட்டுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் அவரின் கணக்கு விபரங்களை அரச சட்டத்தரணிகளுக்கு வழங்க வேண்டும் என்ற உத்தரவே அதுவாகும். தேசிய அபிவிருத்தி வங்கியின் கணக்குகளை வெளிப்படுத்த தவறிய குற்றச்சாட்டு வழக்கின் நேற்றைய விசாரணையின் போது சிராணி பண்டாரநாயக்க மன்றில் ஆஜராகியிருந்தார். இந்தநிலையில் அரச சட்டத்தரணிகள் வங்கிக்குள் கையடக்க தொலைபேசியை கொண்டு செல்ல தடைவிதிக்கப்படுவதாக நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பில் நீதிவான் தேசிய அபிவிருததி வங்கியின் சார்பில் ஆஜரான பிரதிநிதியை வினவிய போது வங்கியின் ஒழுங்குப்படி வங்கி நிர்வாக பிரிவுக்குள் கையடக்க தொலைபேசியை கொண்டு செல்வதும் படம் பிடிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இதனையடுத்து மீண்டும் தரப்படும் என்ற அடிப்படையில் சிராணி பண்டாரநாயக்கவின் கணக்கு விபரங்களை சட்டத்தரணிகளுக்கு வழங்குமாறு நீதிவான் வங்கி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## ஓய்வூதியத்தை செலுத்த அரசாங்கத்திடம் நிதியில்லை - ஓய்வூதிய அதிகாரிகள்

(கொழும்பு)
ஊழியர்களுக்கான ஓய்வூதிய நிதிகளை செலுத்துவதற்கான நிதியில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஓய்வூதிய நிதி தொடர்பில் அரசாங்கம் புதிய ஒரு திட்டத்தை முன்மொழிந்துள்ளமைக்கு எதிராக அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

எனினும் கட்டாயமாக பங்கேற்க வேண்டிய ஓய்வூதிய ஆணையாளர் விசாரணையில் பங்கேற்கவில்லை. முன்னைய திட்டத்தின்படி அரச ஊழியர் ஒருவர் பத்துவருடத்துக்கு மேல் பணியாற்றி 60 வயதாகும் போது ஓய்வூதிய தொகை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

எனினும் புதியமுறைப்படி ஓய்வூதியத்துக்கு கீழ் வரும் அரச ஊழியர் ஒருவர் வங்கியில் இருந்து கடனை பெற்றுக் கொள்ளமுடியும். இது 18 வருடங்களுக்குள் மீள்செலுத்தப்படலாம். இதற்காக 12 வீத வட்டியை வங்கிக்கு செலுத்தவேண்டும்.

எனினும் இதனை ஆட்சேபித்த தொழிற்சங்க சம்மேளன சட்டத்தரணிகள் கடந்த ஒக்டோபர் மாதத்தில் 18ஆயிரம் பேர் தமது ஓய்வூதியத்தை பெறமுடியவில்லை என்று சுட்டிக்காட்டினர். இதற்கு பதிலளித்த ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகள், புதிய திட்டம் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளமையால் ஓய்வூதிய நிதியில் ஒதுக்கீடுகள் இல்லை என்று குறிப்பிட்டனர். இந்தநிலையில் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## கனேடிய உயர்ஸ்தானிகரின் கருத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிருப்தி

கனேடிய உயர்ஸ்தானிகர் செல்லி வைட்டிங்கின் கருத்துக்களுக்கு வெளிவிவகார அமைச்சு அதிருப்தி வெளியிட்டுள்ளது. போர் வெற்றிக் கொண்டாட்டங்களினால் நல்லிணக்கம் ஏற்படாது எனவும், இனங் களுக்கு இடையிலான முரண்பாடுகள் மேலும் அதிகரிக்கும் எனவும் வைட்டிங் தெரிவித்திருந்த கருத்து தொடர்பிலேயே அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் நல்லிணக்கத்தை மோசமாக பாதிக்கும் என வைட்டிக் ஆங்கில ஊடகமொன்றுக்கு அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனால் மாத்தறையில் நடைபெறும் போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரிப்பதாகத் தெரிவித்திருந்தார். எனினும், வைட்டிங்கின் இந்த பகிரங்க அறிவிப்பு இலங்கை அரசாங்கத்தை கடும் அதிருப்தியடைச் செய்துள்ளது. வைட்டிங்கின் நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து உத்தியோகபூர்வமாக அவரின் நடவடிக்கைகக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்க விரும்பாவிட்டால் அதனை அரசாங்கத்திடம் தெரிவித்து விட்டு அமைதியாக இருந்திருக்க வேண்டுமே தவிர, பகிரங்க அறிவிப்புக்களை விடுத்திருக்க கூடாது என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, போர் வெற்றிக் கொண்டாட்டங்களை நடாத்துவது நல்லிணக்கத்தை பாதிக்கும் என கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட்டும் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

## இசைப்பிரியா, உசாளினி தொடர்பில் எதுவும் தெரியாது - இராணுவ பேச்சாளர்

(கொழும்பு)
இராணுவ முகாமில் இசைப்பிரியா மற்றும் உசாளினி என்று ஊடகங்களில் வெளியான புகைப்படங்களில் இருக்கும் இரு பெண்கள் தொடர்பில் இராணுவத்துக்கு தெரியாது என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டார். ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்கள் யார், எவர் என்பது தொடர்பில் நாங்கள் அறியோம். அவர்களின் பெயர்கள் இசைப்பிரியா, உ'ாலினி என்பதைக் கூட ஊடகங்கள் வாயிலாகவே நாம் அறிந்து கொண்டோம். இசைப்பிரியா மற்றும் அவருடன் உள்ள பெண் தொடர்பாக ஊடகங்களில் வெளியான புகைப்படங்கள் மற்றும் செய்திகளுடன் இராணுவத்தின் விசாரணை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இராணுவத்தின் விசாரணை நீதிமன்றத்தின் கீழ் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக சனல் - 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட வீடியோ காட்சிகள், உண்மையானவையா அல்லது பொய்யானவையா என்பது தொடர்பிலும் இந்த இராணுவ விசாரணை நீதிமன்றம் விசாரணை செய்து வருகின்றது. இது தவிர, குறித்த புகைப்படத்தில் இருப்பவர்கள் யார் என்பது தொடர்பில் இராணுவத்துக்கு தெரியாது என்று இராணுவ பேச்சாளர் மேலும் கூறினார்.

## பம்பலப்பிட்டி இந்து கல்லூரி ஆசிரியர் தற்கொலை

(கொழும்பு)
பம்பலப்பிட்டி இந்து கல்லூரி விடுதியில் தங்கியிருந்த உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவர் இன்று அதிகாலை 1 மணியளவில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பொலிஸாரின் தகவலுக்கு அமைய நேற்று அதிகாலை 1 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குளியாப்பிட்டி, இலுக்கேன, பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான பிரான்சிஸ் கெம்லஸ் என்ற ஆசிரியரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. உயிரிழந்த ஆசிரியரின் சடலம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. சட்டமருத்துவ அதிகாரியின் விசாரணைகள் இன்று இடம் பெறவுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்திற்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை எனவும், சடலமாக மீட்கப்பட்டவர் தற்கொலை செய்து கொண்டுள்ளாரா அல்லது இது ஒரு கொலையா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பாடசாலையில் இன்று கல்வி நடவடிக்கைகள் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மோடியின் பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த பங்கேற்கிறார்

(கொழும்பு)
எதிர்வரும் 26ம் திகதி, திங்கட்கிழமை இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் பெரும்பாலும் கலந்து கொள்வார் என கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிகழ்வில் பங்கு பற்றுவதற்கான அழைப்பு புதுடெல்லியிலிருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அயல் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அயல் நாட்டுடன் எப்போதுமே சுமுக உறவை விரும்பும் இலங்கை, அந்த உறவையும் நட்பையும் பலப்படுத்துவதையே விரும்புகிறது. இந்தப் பதவியேற்பு நிகழ்வில் பங்குபற்றுவதன் மூலம் இந்தியாவின் புதிய ஆட்சிப்பீடத்துடன் ஒரு நெருக்கமான உறவைத் தொடர்வதற்கும், இருதரப்பு ஊடாட்டத்தைப் பலப்படுத்துவதற்கு முடியும் என கொழும்பு கருதுகின்றது என இவ்விடயங்களுடன் சம்பந்தப்பட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. திங்களன்று மாலையில் புது டெல்லியின் குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்தப் பதவியேற்பு நிகழ்வு நடைபெறுகின்றது.

தற்சமயம் சீனாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதி, அங்கிருந்து திரும்பிய பின்னர், புதிய இந்தியப் பிரதமரின் பதவியேற்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காகப் புதுடெல்லி செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமெரிக்காவை எதிர்க்க சீனா முயற்சி

ரஷ்யா உள்ளிட்ட இலங்கை, ஈரான் ஆகிய நாடுகளை கொண்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆசிய அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு சீன ஜனாதிபதி எஸ் சி ஜின்பிங் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் தொடர்பான மாநாடு சாங்காயில் நடைபெற்ற போதே சீன ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் அமெரிக்கா இடம் பெறக்கூடாது என அவர் நிபந்தனை விதித்துள்ளார். இதன்மூலம் அமெரிக்காவின் மூலோபாய போட்டியையும் தலையீடையும் குறைக்க சீனா தனது செல்வாக்கை பயன்படுத்தத் தயார் நிலையில் உள்ளதென சீன ஜனாதிபதி கூறியுள்ளார். நம்முடைய பாதுகாப்பு ஒத்துழைப்பை புதிதாக்கி புதிய பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பை கட்டமைப்பு நிறுவ வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய வலய நாடுகளின் பாதுகாப்பு மற்றும் உள்ளக விவகாரங்களில் அமெரிக்கா தேவையற்ற வகையில் மூக்கை நுழைப்பதாக பரவலான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அமெரிக்காவின் நடவடிக்கைகளை சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. இந்நிலையில் சீன ஜனாதிபதியின் புதிய அழைப்பு உலக அரசியல் வரலாற்றில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வதேச

குறித்து இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி விளக்கினார். இலங்கைக்கு மற்றொரு விஜயத்தை மேற்கொண்டு இந்த அபிவிருத்திகளைப் பார்வையிடுமாறும் ஜனாதிபதி இதன் போது கோரிக்கை விடுத்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு விளக்கிய ஜனாதிபதி, இந்தப் பரிந்துரைகளில் 30 வீதமானவை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

போர்க் காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள் குறித்து உள்ளூர் விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் உறுதியாக விருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச விசாரணையை ஏற்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

### 18500 இற்கு

தெரிவிக்கையில்,
ஆணைக்குழு எப்போதும் சுதந்திரமாக மற்றும் வெளிப்படையாக செயல்பட்டு வருகிறது.

http://www.pcicmp.lk/ என்ற இந்த இணையத்தளத்தில் மூன்று மொழிகளில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், முறைப்பாடுகளையும் இணையத்தளத்தின் மூலம் பதிவு செய்ய முடியும். அதற்கான படிவங்கள் பதிவிறக்கம் செய்ய முடியும் என தெரிவித்துள்ளார்.

### ஐ.தே.கவின்

தலைதூக்கியுள்ளதாகத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் போதைப் பொருள் குற்றச் செயல்கள் இடம்பெறுவதில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

### ஈரானுடன்

ருஹானி, இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஆர்வமாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த ஆண்டு நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐ.நா. பொது சபைக் கூட்டத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துக் கொண்டதை நினைவு கூர்ந்த ஈரான் ஜனாதிபதி, மீண்டுமொரு முறை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார உறவுகளை வளர்க்க விரும்புவதாக குறிப்பிட்ட ருஹானி, ஜனாதிபதி மகிந்த ராஜக்சவுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார்.

### மோடி

கொன்று குவித்து இனப்படுகொலை நடத்த, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, இந்தியாவின் முப்படைகளையும் பயன்படுத்தி, ஆயுதங்களைக் கொடுத்து, தமிழ் இனப்படுகொலைக்கு முழுக்காரணம் ஆயிற்று.

தமிழக மீனவர்கள்578 பேருக்கு மேல் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டனர். எனவே, இலங்கை அரசுக்கு எதிராக, தாய்த்தமிழகத்திலும் உலகெங்கிலும் உள்ள கோடானுகோடித் தமிழர்கள் நெஞ்சில் ஆறாத ரணம் ஏற்பட்டு உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், நரேந்திர மோடியின் தேசிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்கும் விழாவிற்கு, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு உள்ளதாகவும், ராஜபக்ஷ கலந்து கொள்ள இருப்பதாகவும் வந்த தகவல் பேரிடியாகத் தாக்குகிறது.

லட்சக்கணக்கான ஈழத்தமிழர்களின் ரத்தக்கறை படிந்த கரங்களோடு, இந்திய நாட்டுக்குள் ராஜபக்ஷ நுழைவதை எந்தவிதத்திலும் தமிழர்களால் சகித்துக் கொள்ள இயலாது. ராஜீய சம்பிரதாயங்கள் என்பதெல்லாம் சவைக்கு உதவாதவை.

தங்கள் நாட்டுக் குடிமக்கள், இன்னொரு நாட்டு ராணுவத்தால் கொல்லப்பட்டால், உடனே அந்த நாட்டுடன் ராஜீய் உறவுகளை, பாதிக்கப்பட்ட நாடு துண்டித்துக் கொள்கிறது. எனவே, சார்க் நாடுகளுக்கு அழைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

1998-99 ஆம் ஆண்டுகளில் வாஜ்பாய் அரசு பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோது, 2004, 09 ஆண்டுகளில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோதும் சிங்கள அதிபர் அழைக்கப்படவில்லை என்பதை, தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

எங்கள் தொப்புள் கொடி உறவுகளான ஈழத்தமிழ் மக்களை ஈவு இரக்கம் இன்றி, வதை செய்து கொன்று குவித்த தலைவர், பதவி ஏற்பு விழாவுக்கு வர அனுமதிக்கப்பட்டால், அந்த நிகழ்ச்சி தமிழ் இன மக்களுக்கு துக்கத்திற்கும், வேதனைக்கும் உரிய நிகழ்ச்சியாகவே அமையும்.

எனவே, தமிழகத்திலும், தரணியெங்கும் வாழும் தமிழ் இன மக்களின் மனதில் சோகத்தை மூட்டி விட்டு, ராஜபக்ஷ கூட்டம் கும்மாளம் போடுவதற்கு வாய்ப்பாக, இலங்கை ஜனாதிபதியை பதவி ஏற்பு விழாவில் பங்கு ஏற்க, அனுமதிக்க வேண்டாம் என்று, தாங்க இயலாத மனவேதனையுடன், பிரதமர் ஆகப் போகின்ற பொறுப்பு ஏற்க இருக்கின்ற நரேந்திர மோடியையும், பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ராஜ்நாத்சிங்கையும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களையும் இருகரம் கூப்பி வேண்டுகிறேன்
எனக் கூறியுள்ளார்.

### தடை தாண்டி

இன்று முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வு ஆனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுக்காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் உட்பட அந்தச்சங்கத்தின் பிரதிநிதிகளை பலாலி பாதுகாப்பு தலைமையகத்திற்கு அழைத்த யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜென்ரல் உதயப் பெரேரா முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவுகூர தடையில்லை ஆனால் அந்த நிகழ்வினை நடத்த அனுமதித்தால் வேறு நிகழ்வினை நடத்தி குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சிப்பார்கள் அதனால் தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்த அனுமதி வழுங்கப்பட வில்லையென்று விளக்கமளித்திருந்தார்.

இருப்பினும் முள்ளிவாய்க்காலில் உயிரிந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவது எமது கடமை என்று ஆசிரியர் சங்கப்பிரதி நிதிகள் இராணுவத்தினருடன் வாதிட்டுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் ஆர்.ராசகுமாரனை விசாரணைக்கு வருமாறு நலாம் மாடியிலிருந்து அழைப்பாணை விடுக்கபட்டிருந்தது. அதேவேளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத் தலைவர் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், மாணவர் ஒன்றியப்பிரதி ,யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் இருவருக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப் பட்டுள்ளது..

### உசாளினி

ல்கள் தெரிவிக்கி ன்றன.

புலனாய்வு பிரிவினருடன் இராணுவத்தினரும் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இசைப்பிரியாவுடன் இருப்பது எங்கள் பிள்ளை: உசாளினியின் பெற்றோர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது இராணுவத்தினரால் உயிருடன் பிடிக்கப்பட்டதாக கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத் துறையில் பணியாற்றிய சோபனா தர்மராஜா என்றழைக்கப்படும் இசைப்பிரியாவுக்கு அருகில் இருக்கின்ற மற்றைய யுவதி, முல்லைத்தீவு, மல்லாவியைச் சேர்ந்த குணலிங்கம் உசாளினி என அவரது பெற்றரோர் தெரிவித்துள்ளனர்.

மற்றொரு யுவதியுடன் இசைப் பிரியாவின் புகைப்படம் ஊடகங்களில் வெளியானதை அடுத்தே அந்த புகைப்படத்தில் இருக்கின்ற மற்றைய யுவதி தங்களுடைய மகளென அவருடைய பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவருடைய பெற்றோரான குணலிங்கம், செல்வராணி தம்பதியர் தெரிவித்ததாவது, இறுதிப்போரில் போது நாம் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றிருந்தோம். அப்போது எங்களது மகள் உசாளினி, 2009 மே மாதம் முற்பகுதியில் காணாமற்போயிருந்தார்.

எங்களுடைய மகள் காணாமற்போனமை தொடர்பாக மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு தரப்பினரிடம் நாம் முறைப்பாடு செய்திருந்தோம்.

காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக குழுவினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போதும் இது தொடர்பில் சாட்சிகளைப் பதிவு செய்திருந்தோம்.

எங்களுக்கு இரண்டு மகள்களும் இரண்டு மகன்களும் இருந்தனர். இதில் எமது மூத்தமகள் உசாளினி, கடந்த 1990ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி மல்லாவி யோகபுரத்தில் பிறந்தார். தரம் 6 வரையில் மல்லாவி பாலிநகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுவந்த இவர், தொடர்ந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தனது கல்வியினைத் தொடர்ந்தார்.

அவர் உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கையில், அதாவது 2008ம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைக்கப்பட்டார். வீட்டுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் புலிகள் அமைப்பில் இணைய வேண்டும் என்ற கொள்கைக்கு அமைவாகவே உசாளினி, அவ்வமைப்பில் இணைக்கப்பட்டார்.

புலிகள் அமைப்பில் அவர் இணைக்கப்பட்டதன் பின்னர், மகளுடன் எங்களுக்கு இருந்த தொடர்பு குறைந்தது. இந்நிலையில் நாம் எங்கள் பிள்ளையினை 2009ம் ஆண்டு மே மாதம், முள்ளிவாய்க்கால் பகுதியில் சந்தித்தோம். அதன்பிறகு எங்கள் மகளை நாங்கள் காணவில்லை.

பின்னர் நாங்கள் 2009 மே 17ம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து செட்டிக்குளம் மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டோம். அப்போதுகூட, எமது மகள் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது பற்றி அறியாமல் இருந்தோம். இதனால், வவுனியாவில் சர்வதேச செஞ்சிலுவை குழுவிலும் குரமன் காட்டிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் எமது மகள் தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்தோம்.

இந்நிலையில், கடந்த 2010ம் ஆண்டு மார்ச் 3ம் திகதி, எமது வீட்டுக்கு வந்த மல்லாவியைச் சேர்ந்த நபர் ஒருவர், உங்கள் மகள் உயிருடன் 4ம் மாடியில் இருக்கிறாள் என்றும் செலவிற்கும் விடுதலைக்குமாக பணம் தரும்படியும் கூறி மகள் கைப்பட எழுதிய கடிதமொன்றினை எங்களுக்கு காண்பித்தார்.

அதனை நம்பி நாங்கள் ஒரு இலட்சம் ரூபா பணமும் தோடு ஒன்றையும் அவரிடம் வழங்கினோம். இருந்தும் அதற்கான பயன் எதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில், அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நாங்கள் எங்கள் மகள் பற்றி சாட்சியமளித்தோம்.

இந்நிலையில் இம்மாதம் 19ம் திகதி ஊடகங்களில் வெளியான புகைப்படத்தில் இசைப்பிரியாவுடன் எமது மகள் இருப்பதை கண்டோம். அதன்பிறகே எங்கள் மகள் கொல்லப்படவில்லை என்றும் அவர் இன்னும் உயிருடன் இருக்கிறாள் என்பதனை அறிந்துகொண்டோம்.

இசைப்பிரியா கொல்லப்பட்டமையை புகைப்படங்கள் மூலம் அறிந்தோம். இருந்தும் எமது மகள் கொல்லப் படவில்லையென்றும் இன்னமும் எமது மகள் உயிருடன் இருக்கின்றாள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தோல்விக்கு காரணம் என்ன? டோனி



கொல்கத்தாவிற்க்கெதிரான நேற்றைய ஆட்டத்தில் சென்னை அணி தோல்வியடைந்ததற்கு நாணய சுழற்சியில் தோற்றது தான் காரணம் என அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் நேற்று நடந்த ஆட்டத்தில் சென்னை- கொல்கத்தா அணிகள் மோதின. முதலில் விளையாடிய சென்னை அணியால் 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

ரெய்னா 52 பந்தில் 3 பவுண்டரி, 5 சிக்சருடன் 65 ஓட்டங்களும், மேக்குல்லம் 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 2 ஓவர் எஞ்சி இருந்த நிலையில் 2 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தோல்வி குறித்து சென்னை அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், தொடக்கத்தில் ஆடுகளம் பந்துவீச்சுக்கு ஏற்ற வகையில் இருந்தது. அதனால் நாணய சுழற்சியில் தோற்றது அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆனால் இந்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்திய கொல்கத்தா அணி வீரர்கள் நேர்த்தியுடன் பந்து வீசினார்கள்.

மேலும் ரெய்னா இந்த போட்டியிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நாங்கள் 10 முதல் 15 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்து விட்டோம். அதனால் கொல்கத்தா அணிக்கு சவால் கொடுக்க முடியாமல் போனது என்று கூறியுள்ளார்.

## ஏறிய மவுசு: உலக அளவில் உச்சம் தொட்ட கோஹ்லி



உலக அள்வில் விளம்பரத்தின் மூலம் அதிக வருமானம் பெறும் வீரர்கள் பட்டியலில் இந்தியா கிரிக்கெட் அணியின் இளம் வீரர் கோஹ்லி 2வது இடம் பிடித்துள்ளார்.

இந்திய அணியில் சிறந்த இளம் வீரராக வலம் வரும் விராட் கோஹ்லி, இமாலய ஓட்டங்களையும் அதிரடியால் எட்டிப்பிடிக்கும் திறமை பெற்றவர்.

தற்போது ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் அணியை வழிநடத்தும் கோஹ்லி உலக அளவில் விளம்பரத்தின் மூலம் அதிகம் வருமானம் ஈட்டும் வீரர்கள் வரிசையிலும் இமயத்தை தொட்டுள்ளார்.

இது குறித்து இங்கிலாந்தின் ஆங்கில பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியில், உலக அளவில் விளம்பரத்தின் மூலம் அதிக வருமானம் பெறும் வீரர்களில் முதலிடத்தில் இங்கிலாந்தின் பார்முலா வீரர் ஹாமில்டன் உள்ளார்.

இதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் வீரர் கோஹ்லி 2வது இடத்தை பிடித்துள்ளார். இதில் இடம்பெற்றுள்ள இவர் ஒருவரே இந்திய வீரர்.

மேலும் பிரேசில் கால்பந்து வீரர் நெய்மர் (7), போர்ச்சுகல் கால்பந்து வீரர் ரொனால்டோ (4), செர்பிய டென்னிஸ் வீரர் ஜோகோவிச் (15), இங்கிலாந்து டென்னிஸ் நட்சத்திரம் ஆன்டி முர்ரே (21), ஜெர்மனியின் பார்முலா1 வீரர் வெட்டல் (27), பெலாரசின் டென்னிஸ் வீராங்கனை அசரன்கா (31) ஆகிய வீரர்களின் பெயர்களை பட்டியலில் குறிப்பிட்டுள்ளது.

இந்த பட்டியலானது அடுத்த 3 ஆண்டுகளில் இவர்கள் விளம்பரத்தில் பெறும் வருமானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்தை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி



இங்கிலாந்துக்கெதிரான டி20 ஆட்டத்தில் இலங்கை அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் முதலில் வென்ற இங்கிலாந்து களத்தடுப்பை தெரிவு செய்தது. இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர் முடிவில் 183 ஓட்டங்கள் எடுத்தது.

184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து 20 ஓவர் முடிவில் 174 மட்டுமே எடுத்தது.

இதனால் இலங்கை 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மலிங்கா 3 விக்கெட் கைப்பற்றி வெற்றிக்கு காரணமாக இருந்தார்.

20 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்த பெரேரா ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

## சாம்பியன்ஸ் லீக் கால்பந்து: இறுதிப்போட்டியில்
### கலக்க வருகிறார் தீபிகா படுகோனே



சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் இந்தி நடிகை தீபிகா படுகோனே சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

ஐரோப்பிய யூனியன் கால்பந்து கூட்டமைப்பு சார்பில் சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஸ்பெயின் நாட்டின் லிஸ்பன் நகரில் நடைபெறும் இறுதிப்போட்டியில் ரியல் மாட்ரிட் மற்றும் அட்லெட்டிகோ மாட்ரிட் ஆகிய இரு அணிகள் மோத இருக்கின்றன. இந்த போட்டியில் சிறப்பு விருந்தினராக பாலிவுட் நடிகை தீபிகா படுகோனே கலந்து கொள்கிறார்.

இது குறித்து தீபிகா கூறுகையில், சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள எனக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் இரு சிறந்த அணிகள் பங்கேற்கும் இந்த ஆட்டத்தை காண நான் ஆவலாக உள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் புதியவனில் விளம்பரம் செய்யுங்கள்**

தேசிய நாளிதழ்களுக்கு நிகராக மன்னாரில் இருந்து வெளிவரும்
புதியவன் நாளிதழில் மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களை வெளியிடலாம்

வீடு, காணி விற்பனை
வீடு, கடை வாடகை
வாகன விற்பனை/வாடகைக்கு
திருமண சேவை
செல்லப்பிராணிகள் விற்பனைக்கு
கல்விச் சேவை

ஆகிய வற்றுக்கான விளம்பரங்களை வெறும் 400/= ருபாவில் இருந்து பிரசுரிக்கலாம்.

மரண அறிவித்தல், 31ஆம் நாள் அறிவித்தல். ரூபாய் 500/= மட்டுமே.

ஏனைய அனைத்து விளம்பரங்களுக்கும் ரூபா 500/= இல் இருந்து

இன்றே அழையுங்கள். உங்கள் அனைத்து வியாபாரத் தொடர்புகளும் நன்றே பெருகிட வாருங்கள் புதியவன் அலுவலகத்திற்கு இல்லையேல் அழையுங்கள் கீழ்வரும் அலைபேசி இலக்கங்களை

விளம்பரப்பிரிவு
புதியவன்
பிரதான வீதி, மன்னார்.
023 2223545/077 7802720
0771770503

## மும்பை இந்தியன்ஸ் அணி பஞ்சாப்பை வீழ்த்தியது

7-வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் திருவிழா இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் இரண்டு முறை மோத வேண்டும்.

லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் "பிளே-ஆப்" சுற்று என்ற இறுதிப்போட்டிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெறும். "பிளே-ஆப்" சுற்றுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் தகுதி பெற்று விட்டன.

எஞ்சிய இரண்டு அணிகள் எவை என்பதில் 5 அணிகள் இடையே போட்டி நிலவுகிறது.

இந்த நிலையில் இந்த போட்டியின் 48-வது லீக் ஆட்டம் மொகாலியில் நேற்று இரவு நடந்தது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்- மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் டேவிட் மில்லர் நீக்கப்பட்டு 'ஸான் மார்'க்கு இந்த சீசனில் முதல் முறையாக களம் இறங்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. மும்பை இந்தியன்ஸ் அணியில் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஹர்பஜன்சிங்குக்கு பதிலாக பிரவீன்குமார் சேர்க்கப்பட்டார்.

"டாஸ்" ஜெயித்த மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டன் ரோகித் ஸர்மா, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை முதலில் பேட்டிங் செய்ய பணித்தார்.
தொடக்க ஆட்டக்காரர்களாக சேவாக், மனன்வோரா ஆகியோர் களம் இறங்கினார்கள். இருவரும் அடித்து ஆடினார்கள்.

முதல் ஓவரில் பிரவீன்குமார் வீசிய முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சேவாக், அடுத்த பந்தை சிக்சருக்கு தூக்கினார். அடித்து ஆடிய சேவாக் 11 பந்துகளில் ஒரு பவுண்டரி, 2 சிக்சருடன் 17 ரன்கள் எடுத்த நிலையில் துரதிருஸ்டவசமாக ரன்-அவுட் ஆனார்.

சேவாக் அடித்த பந்து எதிர்முனையில் ஓடிய மனன்வோரா காலில் பட்டு நின்றதால் பின்னால் நின்று கொண்டு இருந்த பிரவீன்குமார் அதனை எடுத்து ஸ்டம்பை பதம் பார்த்தார்.

அடுத்து களம் கண்ட ஸான் மார் அதிரடியாக விளையாடி 17 பந்துகளில் 2 பவுண்டரி, 2 சிக்சருடன் 30 ரன்கள் எடுத்து சான்டோகி பந்து வீச்சில் பொல்லார்ட்டிடம் கேட்ச் கொடுத்து அவுட் ஆனார்.

அடுத்து ஆடிய மனன்வோரா 36 ரன்னில் (34 பந்துகளில் 4 பவுண்டரி, ஒரு சிக்சருடன்) ஸ்ரீரியாஸ் கோபால் பந்து வீச்சில் போல்டு ஆனார்.

அதே ஓவரில் ரன் குவிப்பில் முதலிடத்தில் இருக்கும் மேக்ஸ்வேல் 3 பந்துகளில் 2 ரன் எடுத்த நிலையில் ஸ்ரீரியாஸ் கோபால் பந்து வீச்சில் அவரிடமே கேட்ச் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

அப்போது அணியின் ஸ்கோர் 11 ஓவர்களில் 93 ரன்னாக இருந்தது.

இதைத்தொடர்ந்து விரித்திமான் சஹா, கேப்டன் ஜார்ஜ் பெய்லியுடன் ஜோடி சேர்ந்தார். விரித்திமான் சஹா 3 ரன்னில் ரன்-அவுட் ஆனார்.

அடுத்து வந்த அக்ஸர் பட்டேல் 6 ரன்னில் பிரவீன்குமார் பந்து வீச்சில் ரோகித் 'சர்மாவிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார்.

இதனை அடுத்து ரிசி தவான், ஜார்ஜ் பெய்லியுடன் இணைந்தார். இருவரும் அதிரடி காட்டியதால் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது. ஜார்ஜ் பெய்லி 30 பந்துகளில் 2 பவுண்டரி, 2 சிக்சருடன் 39 ரன்கள் சேர்த்து ஜஸ்பிரித் பம்ரா பந்து வீச்சில் பவுண்டரி எல்லையில் அம்பத்திராயுடுவிடம் கேட்ச் கொடுத்து பெவிலியன் திரும்பினார்.

அதே ஓவரில் ஹென்ரிக்ஸ் முதல் பந்திலேயே ரன் எதுவும் எடுக்காமல் போல்டு ஆனார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 8 விக்கெட் இழப்புக்கு 156 ரன்கள் எடுத்தது. ரிசி தவான் 9 பந்துகளில் 2 பவுண்டரியுடன் 14 ரன்னும், சிவம்சர்மா ஒரு ரன்னும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். மும்பை இந்தியன்ஸ் அணி தரப்பில் ஸ்ரீரியாஸ் கோபால், ஜஸ்பிரித் பம்ரா தலா 2 விக்கெட்டும், பிரவீன்குமார், சான்டோகி தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் 157 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மும்பை இந்தியன்ஸ் அணி 19 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மைக் ஹஸ்ஸி 6 ரன்னிலும், அம்பத்தி ராயுடு 17 ரன்னிலும், ரோகித் 'ர்மா 18 ரன்னிலும் ஆட்டம் இழந்தனர். தொடக்க ஆட்டக்காரர் சிம்மோன்ஸ் 61 பந்துகளில் 14 பவுண்டரி, 2 சிக்சருடன் 100 ரன்னும், பொல்லார்ட் 6 பந்துகளில் ஒரு சிக்சருடன் 8 ரன்னும் எடுத்து களத்தில் இருந்தனர். சிம்மோன்ஸ் அடித்த சதம் இந்த ஐ.பி.எல். தொடரில் அடிக்கப்பட்ட முதல் சதமாக பதிவானது. பஞ்சாப் அணி தரப்பில் ஹென்ரிக்ஸ், அக்'ர் பட்டேல், ரிசி தவான் தலா ஒரு விக்கெட்டுகள் கைப்பற்றினார்கள்.

12-வது ஆட்டத்தில் ஆடிய மும்பை இந்தியன்ஸ் அணி பெற்ற 5-வது வெற்றி இதுவாகும். இதன் மூலம் மும்பை அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பில் நூலிழையில் நீடிக்கிறது. அடுத்த சுற்றுக்கு முன்னேறி விட்ட பஞ்சாப் அணி 12 ஆட்டங்களில் ஆடி கண்ட 3-வது தோல்வி இது. பஞ்சாப் 2-வது முறையாக மும்பையிடம் தோற்றுள்ளது.

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 22.05.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org